பக்கங்கள் - 26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 14 வெள்ளிக்கிழமை 31.10.2025 | அதிர்வு 92

## யாழ்ப்பாணம் நகரில் போதைப்பொருளுடன் 8 பேர் சிக்கினார்கள்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பொலிஸார், யாழ். நகரில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கைகளின் 09

# முதல்வர் வேட்பாளரை இறக்குமதி செய்யோம்!

## கட்சிக்காகச் செயற்பட்டவரைத்தான் களமிறக்குவோம் என்கிறது தமிழரசு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

வரும் மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியோடு தொடர்புடைய - கட்சிக்குப் பங்களிப்புச் செய்த பொருத்தமான எவராவது ஒருவரைத்தான் எங்களுடைய முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்குவோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் வெளியில் இருந்து யாரையும் இறக்குமதி செய்ய மாட்டோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவரு 08




# அரச எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்காவிடின் அரசியலில் பெரும் பின்னடைவைச் சந்திப்பீர்!

## சஜித் அணியை இப்படி எச்சரிக்கின்றது மொட்டுக் கட்சி

வரும் நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள அரசுக்கு எதிரான பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காவிட்டால் அது அந்தக் கட்சிக்கே அரசியல் ரீதியில் பெரும் பின்னடைவாக அமையும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசின் ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் ஜனநாயக விரோத நடைமுறைகளுக்கு எதிராக எதிர் வரும் நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் கூட்டம் மற்றும் எதிர்ப்புப் பேரணியை நடத்துவதற்கு முக்கியமான சில எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன , ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய , மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் 09






முன்னைய அரசுகளின் காலத்தில் இடம் பெற்ற ஊழல், மோசடி, முறைகேடுகள் குறித்து விசாரணை செய்து, தவறிழைத்தோரைச் சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை வாங்கிக் கொடுப்போம் என்று தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு சூளுரைத்தாலும் அது செயலளவில் குறிப்பிடத்தக்க வேகத்தில் முன் நகர்வதாகத் தெரியவில்லை என்று நேற்றுமுன்தினம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

உப்புச் சப்பற்ற விவகாரங்களுக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்தமை போன்ற சில்லெடுப்புகளில் தான் இந்த அரசின் போக்குத் தொடர்கின்றது, ஆனால் சுமந்திரன் - ஹக்கீம் - சம்பிக்க ரணவக்க ஆகியோர் ஈ-விஸா விவகாரத்தை ஒட்டி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அப்போதைய பொதுசன பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸூம் வகையாகச் சிக்கு 08





### இன்று சமூகத்தில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைப்பு

# ஒரு பக்கம் கொலைக் கலாசாரம்! மறுபக்கம் ஜே.வி.பி. சர்வாதிகாரம்!!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கடும் சீற்றம்

“தற்போதுள்ள முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வந்து, நீதி நியாயம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதாக உறுதியளித்து தற்போதைய அரசு கொண்டு வந்துள்ள புதிய முறைமை மாற்றத்தில், கொலை கலாசாரம் பரவலடைந்து, கொலை நடவடிக்கைகள் அதிகரித்து காணப்படுகின்றன. தற்போது போட்டிக்கு மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். மக்கள் பிரதிநிதிகள் வெளியே சென்று மக்களுக்குச் சேவை ஆற்ற முடியாத நிலை எழுந்துள்ளது.” – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

“இத்தகைய சூழ்நிலைக்கு மத்தியில், அரசு பொய் சொல்லிக் கொண்டு, சமூகத்தை கொலைகாரர்கள், பாதாள உலகக் கும்பல்கள் மற்றும் கொலையாளிகளிடம் ஒப்படைத்துள்ளது. அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் விடுத்து, அரசாளுகையில் சர்வாதிகாரப் போக்கை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது. அரசை மையமாகக் கொண்ட சர்வாதிகாரக் கட்டமைப்பை உருவாக்கி, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சிகளை தற்போது மேற்கொண்டு வருகின்றது.” – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு, மட்டக்குளி பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து



கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த வெலிகம தவிசாளர், தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் கூறி, பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து பூர்வமாக கோரிக்கை விடுத்திருந்தார், ஆனாலும் இறுதியில் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படாததால் அவர் கொலையாளிகளுக்குப் பலியானார். நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானாவுக்கும் கூட உயிருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இந்த உயிர் அச்சுறுத்தல்களைப் பொலிஸார் வெளிப்படுத்தவில்லை. ஜகத் விதானதான் வெளிக்கொணர்ந்தார். இது குறித்து ஜகத் விதான பேசும்போது, பொலிஸ்மா அதிபர் நேரடியாகவே அவரைக் குற்றவாளியாக்கியுள்ளார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு அரசே பொறுப்பு. பாதுகாப்பை உறுதி செய்யுமாறு சபாநாயகருக்கு எழுத்துபூர்வமாக அறிவித்தும், வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எந்தப் பதிலும் இல்லை. நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஏதேனும் நடந்தால், அரசே பொறுப்புக் கூற வேண்டும். பொய்களை ஒதுக்கி வைத்துவிட்டு, சட்டம் – ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தக் கொலைகாரர்கள், போதைப் பொருள் கும்பல்கள் அல்லது திட்டமிட்ட குற்றச் செயல்களை மேற்கொண்டு வரும் கும்பல்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு எந்தவித தொடர்புகளும் இல்லை. இன்று சமூகத்தில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. ஒரு பக்கம் கொலைக் கலாசாரம். மறுபக்கம் ஜே.வி.பி.யின் சர்வாதிகாரம்.” – என்றார்.













# போதைப்பொருள்களுக்கு எதிரான சவாலை எதிர்கொள்ள நாம் தயார்

## ‘முழு நாடுமே ஒன்றாக’ தேசிய செயற்பாட்டு அங்குரார்ப்பண நிகழ்வில் ஜனாதிபதி உரை

போதைப்பொருட்களுக்கு எதிரான பரந்த பொதுமக்கள் இயக்கத்தை கட்டியெ முப்புவதன் மூலம், நிச்சயமாக போதைப் பொருள் அச்சுறுத்தலை நாட்டிலிருந்து முற்றாக ஒழித்து, எதிர்கால சந்ததியினரையும் சமூகத்தையும் அதிலிருந்து மீட்டெடுப்போம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான ‘முழு நாடுமே ஒன்றாக’ தேசிய செயற்பாட்டு அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் உயிரைப் பறித்து, நாட்டின் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் அழிக்கும் ஒரு தேசிய பேரழிவாக மாறியுள்ள போதைப்பொருள் வர்த்தகத்திற்கு இனிமேலும் இடமளிக்க தமது அரசு தயாராக இல்லை என்று தெரிவித்த ஜனாதிபதி, கைது செய்தல், புனர்வாழ்வு, தடுப்பு, பொதுமக்கள் அழுத்தம், மதம், விளையாட்டு மற்றும் கலாசாரம் ஆகிய அனைத்து துறைகளையும் ஒன்றிணைத்து, “முழு நாடுமே ஒன்றாக” தேசிய செயற்பாடு பன்முகத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

போதைப்பொருள் அச்சுறுத்தல் இயற்கையாக உருவாகவில்லை என்றும், அது நீண்ட காலமாக அரசியல்வாதிகள் மற்றும் சில அரச அதிகாரிகளின் ஆசிர்வாதத்துடன் உருவாக்கப்பட்டது என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசியல் நிழலின் கீழ் போலியான ஒரு அதிகாரத்தை உருவாக்கிக்கொள்வதற்கு குற்றவாளிகளுக்கு இருந்த வாய்ப்பை தற்போதைய அரசு முடிவுக்குக் கொண்டுவந்துள்ளதால், அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்து அந்த வலையமைப்பில் இருந்து அகன்று செல்லுமாறு அதனை ஆதரிக்கும் அரச அதிகாரிகளுக்கு கூறுவதாகவும் தெரிவித்தார். இந்த வர்த்தகத்தில் ஈடுபட்ட எவருக்கும் இனி ஒளிந்து கொள்ள வாய்ப்பு இருக்காது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், கிராமங்களுக்கும் மதத் தலங்களுக்கும் இடையிலான கலாசார தொடர்பைப் பயன்படுத்தி இந்த அச்சுறுத்தலை ஒழிப்பதில் முன்னணியில் இருக்குமாறு மதத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்த ஜனாதிபதி, இந்தப் பணியை வெற்றிகரமாக்கும் வகையில், போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பான செய்திகளை அறிக்கையிடும் போது ஒழுக்கத்தையும் நாகரிகத்தையும் பேணுமாறு அனைத்து ஊடக நிறுவனங்களையும் கேட்டுக்கொண்டார்.

போதைக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்காக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து அதிக நிதி ஒதுக்கப்படும் என்றும், இதற்காக அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து தேசிய செயல்பாட்டு மையத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்

தொடர்ச்சி▼





# போதைப்பொருள்களுக்கு எதிரான சவாலை எதிர்கொள்ள நாம் தயார்

தொடர்ச்சி▲

ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நாட்டில் போதைப்பொருள் பரவல் ஒரு தேசிய பேரழிவாக மாறியுள்ளதுடன், பல குற்றங்கள் போதைப்பொருள் வர்த்தகத்தை மையமாகக் கொண்டு நடப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. திறமையாக முடிவெடுக்கும் பொறிமுறை மற்றும் பரந்த பொதுமக்கள் பங்கேற்புடன் கூடிய தேசிய அளவிலான வேலைத்திட்டத்தின் மூலம் இந்த அச்சுறுத்தலை ஒழிக்க வேண்டும் என்பதை அரசாங்கம் தற்போது இனங்கண்டுள்ளதுடன், இந்த தேசிய இலக்கை அடைய 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய பணியை செயல்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், பரந்த விளம்பரச் செயல்முறை மூலம் இந்த அச்சுறுத்தல் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய வலையமைப்பை துண்டித்தல், புனர்வாழ்வு வாய்ப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் போதைப் பொருள் பாவனையை கைவிட விரும்புவோருக்கு வாய்ப்புகளை வழங்குதல் ஆகியவை எதிர்பார்க்கப்படுகின்றன.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாட்டை ஆக்கிரமித்துள்ள பேரழிவை தோற்கடிப்பதற்காக இன்று அனைவரும் ஒன்று திரண்டிருக்கின்றோம். இந்த பேரழிவு எந்தளவு ஆழமானது மற்றும் நாகசரமானது என நாம் அறிவோம். எமது பிள்ளைகள் எமது சமூகம் என்பன இந்த மாயப் பேரழிவிற்கு இறையாகி வருகிறது. இது தற்போது உருவானதொன்றல்ல. பல தசாப்தங்களாக வளர்ந்து இந்த பேரழிவு முழு சமூகத்திற்குள்ளும் புறையோடிச் சென்று பீதியை உண்டாக்கும் நிலைக்கு மாறியுள்ளது.


இந்தப் பயணத்தில் எமக்கு தெரிவு செய்யக் கூடிய இரு பாதைகள் தான் உள்ளன. முதலாவது முன்னரைப் போன்றே இதற்கு இடமளித்து கண்டு கொள்ளாமல் இருப்பது. இதற்கு எதிராக போராடுவது இரண்டாவது பாதையாகும். நானும் எனது அரசாங்கமும் இந்த பேரழிவை எதிர்த்து போராடுவதற்கு முடிவு செய்துள்ளோம்.

இந்தப் பேரழிவு எமது பிள்ளைகளை ஆட்கொண்டு வருகிறது. சிறை செல்லும் 64 வீதமானவர்கள் போதைப்பொருள் சார்ந்த தவறுகளுக்காக பிடிபடுபவர்களாகும். 18-26 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்கள் இதற்கு கூடுதலாக இறையாகின்றனர். அவர்களின் எதிர்காலம், எதிர்பார்பார்ப்புகள் வீதிகளில் அழிந்து போகின்றன. இதனை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஒவ்வொரு பிள்ளைகள் பிறக்கும் போது பெற்றோர் பெரும் எதிர்பார்ப்புகளை கொண்டிருப்பர். ஆனால் தமது கண்முன்னே தமது பிள்ளைகள் நாசமடைவதை கண்டு அவர்கள் வேதனை அடைகின்றனர். பெற்றோர் சமூகத்தில் இருந்து ஓரங்கட்டப்பட்டுகின்றனர். இந்த பேரழிவிற்கு முழு குடும்பமும் இறையாகின்றது. முழு குடும்ப அலகும் வீழ்ச்சியடையும் அச்சுறுலுக்கு முகங்கொடுத்துள்ளது.

கிராமம் கிராமமாக இந்த மாயச் சூறாவளி பரவி வருகிறது. உடைகளை காயவைக்கவோ நெல்லை காயப் போடவோ முடியாது. மகளை தனியாக வீட்டில் நிறுத்தி விட்டுச்செல்ல முடியாது என கிராமங்களில் வாழும் தாய்மார்கள் கூறுகின்றனர். கிராமங்கள் பீதியில் உள்ளன. குற்றச்செயல்கள் கிராமங்களில் உருவாகின்றன. இந்த பேரழிவு முழு சமூகத்தையும் ஆட்கொண்டுள்ளது.

வீதி விபத்துக்களில் அநேகமானவை போதைப் பொருட்களுடன் தொடர்புபட்டவையாக உள்ளன. எமது நாட்டில் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான வன்முறைகளில் அதிகமானவை போதைப் பொருள்கள் சார்ந்தவை. பொது இடங்களில் விபரீதமான பாலியல் ஆசைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த பேரழிவு நாட்டில் பாரிய வீழ்ச்சியை

தொடர்ச்சி▼





# போதைப்பொருள்களுக்கு எதிரான சவாலை எதிர்கொள்ள நாம் தயார்

தொடர்ச்சி▲

உருவாக்குகிறது. கட்டுநாயக்க-கொழும்பு நெடுஞ்சாலையின் பாதுகாப்பிற்கு அதிரடிப்படையை ஈடுபடுத்த நேரிட்டுள்ளது. கேபிள்கள் வெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றன. யானை வேலிக்கு இடப்பட்டுள்ள பெட்டரி திருடப்படுகிறது . பாலங்களில் உள்ள இரும்பை வெட்டி எடுத்துச் செல்கின்றனர். இதனால் நாட்டில் ஸ்தீரமற்ற நிலை உருவாகின்றது.

பொது சமூகத்தினதும் பிரஜைகளினதும் பாதுகாப்பிற்காக இந்த பேரழிவைத் தோற்கடிக்க வேண்டும். நாம் எடுக்கும் முன்னெடுப்பை நிச்சயமாக வெற்றி பெறச் செய்வோம். இதனுடன் தொடர்புபட்டதாக பாரிய நிதி வலையமைப்பு காணப்படுகிறது. ஒரு கிலோ 2 கோடி ரூபாவை விட அதிக விலைக்கு விற்பனை செய்யும் போதைப் பொருள் உள்ளது. எமக்கு 800-900 கிலோ பிடிபடுகிறது. நாட்டிற்குள் வரும் அனைத்து போதைப் பொருட்களையும் நாம் கைப்பற்றவில்லை. அனைத்தையும் கைப்பற்றினால் அவை நாட்டிற்குள் வராது. அவர்கள் அனுப்பும் தொகையில் சிறு தொகையே கைது செய்யப்படுகிறது.

எந்தளவு தொகை விநியோகிக்கப்படுகிறது என்பது கைப்பற்றும் தொகையின் மூலம் கணிக்கலாம். கருப்புப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வர்த்தகமாக இது மாறியுள்ளது. அதனால் அவர்களிடையே சந்தையை பங்கு போடுவதில் மோதல் காணப்படுகிறது. ஒவ்வொரு குழுக்களுக்கிடையில் துப்பாக்கிச் சூடு நடைபெறுகிறது. ஒவ்வொரு பிரதேச எல்லைகளுக்கு மற்றைய தரப்பு நுழைய முடியாது. போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புபட்டதாகவே இந்த கொலைகள் நடைபெறுகின்றன.

பொதுச் சமூகத்தின் பாதுகாப்பிற்காவே அரச பொறிமுறையொன்று உள்ளது. ஆனால் அவர்களிடமுள்ள பண பலத்தினால் அரச பொறிமுறை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இனிமேலும் இதனை மறைத்து இந்தப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க முடியாது. அவர்களிடையே ஆயுதங்கள் உள்ளன. அனுமதிப் பத்திரத்துடன் ஆயுதங்களை பயன்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திற்கே உள்ளது. அரசிடம் இருக்க வேண்டிய ஆயுதங்கள் எவ்வாறு அவர்கள் கைகளுக்குச் சென்றது? சில இராணுவ முகாங்களில் இருந்து 73 ரி - 56 ரக துப்பாக்கிகள் அவர்களின் கைகளுக்குச் சென்றுள்ளன. அதில் சுமார் 35 துப்பாக்கிகள் மீளப் பெறப்பட்டுள்ளன.அதற்குப் பயன்படுத்தும் ரவைகள் பிடிபட்டுள்ளன. இராணுவ கேர்னல் ஒருவர் தான் இவற்றை வழங்கியுள்ளார். அதற்காக அவரின் வங்கிக் கணக்கிற்கு பணம் கிடைத்துள்ளது. ஒரு பொலிஸ் அதிகாரி தனது ஆயுதத்தை விற்பனை செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளார். அந்த ஆயுதக் குழுக்களிடமுள்ள பண பலத்தினால் இவை நிகழ்ந்துள்ளன.

இது தொடர்பான விசாரணைகளில் பொலிஸ் அதிகாரிகளின் தொடர்பு வெளிப்பட்டுள்ளது.

இராணுவம்,கடற்படை,விமானப்படை மற்றும் பொலிஸ் என்பன இதனைத் தடுக்க பெரும் பங்காற்றுகின்றன. ஆனால் விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் அந்த கும்பலின் பண பலத்தில் சிக்கியுள்ளனர். தேசிய பாதுகாப்பு, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் அதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்களுக்குள் கருப்பு ஆட்சி உருவாக்கப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வாகனங்கள் இன்றி வாகன இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திலுள்ள சிலர் சட்டவிரோத வாகனங்கள் பாவனைக்கு வர பங்களித்துள்ளனர். குடிவரவு குடியகல்வு திணைக்களம் தேசிய பாதுகாப்பிற்காக பங்களிக்கும் நிறுவனம். ஆனால் சில

தொடர்ச்சி▼







# போதைப்பொருள்களுக்கு எதிரான சவாலை எதிர்கொள்ள நாம் தயார்

தொடர்ச்சி▲

அதிகாரிகள் பாதாள தலைவர்களுக்கு கடவுச்சீட்டு தயாரித்து வழங்கியுள்ளனர். இவ்வாறு தான் அரச கட்டமைப்பிற்குள் இந்தப் பேரழிவு நுழைந்துள்ளது.

சுங்கத்திணைக்களத்திலுள்ள சிலருக்கும் இந்தச் கும்பலுடன் தொடர்பு உள்ளது. அதனால் உத்தியோகபூர்வ அரசாங்கம் இருப்பதைப் போன்று அதே அளவு பலமாக இல்லாவிட்டாலும் அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கும் அரச பொறிமுறையொன்றை தம் பிடியில் வைத்துள்ளனர். வெளிப்படையான அரசாங்கத்தைப் போன்றே மறைவான கருப்பு ஆட்சியொன்று உருவாகியுள்ளது.

இந்த நாட்டில் இரண்டு ஆட்சிகள் இருக்க முடியாது. மக்களின் ஜனநாயக ஆணையினால் உருவான ஆட்சி மாத்திரமே இருக்க முடியும். கருப்பு ஆட்சி ஒழிக்கப்படும் என உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறோம்.

அரசியல் கட்சிகளுக்குள்ளேயும் அவை நுழைந்துள்ளன. சிலர் மக்கள் பிரதிநிதிகள் ஆகின்றனர். உள்ளூராட்சி தலைவர்களாக தெரிவாகின்றனர். தனியான பட்டியல் தயாரித்து தேர்தலில் போட்டியிட சிலர் தயாராகி இருந்தனர். ஆட்சி அதிகாரம் ,எம்.பிகள் உருவாக்குவது வரையான ஆரம்ப விதை நடப்பட்டுள்ளது. இதனை அடையாளங் கண்டுள்ளோம். இந்த நிலை தானாக உருவானதல்ல. நீண்ட காலமாக அரசியல் மற்றும் சில அரச அதிகாரிகளின் ஆசிர்வாதத்துடன் தான் இது உருவானது. பிரஜைகள் அச்சத்துடன் உள்ளனர். சில வர்த்தகர்கள் இதிலிருந்து ஒதுங்க அஞ்சுகின்றனர். போதைப் பொருள் விற்பனை செய்வதில் இருந்து ஒதுங்கினால் சுடப்படுகின்றனர்.

இதன்பின்னணியில் தெளிவான அரசியல் ஆசிர்வாதம் உள்ளது. அதிகாரிகளின் ஆதரவு இருக்கிறது. சிலருடைய சொத்துக்களை பார்த்தால் உழைப்பின் ஊடாக இந்தளவு சொத்துக்களை ஈட்ட முடியாது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் தீர்க்கமான கட்டத்திற்கு வர வேண்டும். அதற்கான நேரம் வந்துவிட்டது. நாம் இதனைச் செய்யாவிட்டால் வேறு யாரும் செய்ய மாட்டார்கள் என எம்மிடம் பலரும் கூறியுள்ளனர். இதனை மாத்திரம் நிறைவேற்றுங்கள் புண்ணியம் கிடைக்கும் என சில தாய்மார் கூறுகின்றனர். பொலிஸ்மா அதிபர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் பலரும் இது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை தோற்கடிக்க பொலிஸை சுத்தம் செய்ய வேண்டும் என்பதை ஏற்கிறோம். தகவல்களை பொலிஸாருக்கு வழங்கினால் மறு நிமிடமே வீட்டுக்கு வருவர் என கிராமங்களில் சொல்வார்கள். இதனை முடிவுக்குக் கொண்டுவர பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் பொலிஸ்மா அதிபரும் பெரு முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். அநேகமான பொலிஸார் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். உடனடியாக அந்த வலையமைப்பில் இருந்து அகன்று செல்லுமாறு ஏனைய தரங்களில் உள்ளோரிடம் கோருகிறோம். உங்கள் தொழிலின் பாதுகாப்பு சீருடையின் கௌரவத்தை பாதுகாத்து அகன்று செல்லாவிட்டால் நாம் அவர்களை நீக்குவோம்.

பொதுமக்களின் வரிப்பணத்தில் இயங்கும் நிறுவனங்கள் நாட்டின் பாதுகாப்பிற்கு முரணாக செயற்படுவது எந்தளவு பாரதூரமானது. எனவே இதற்கு அனைத்துவிதமான ஒத்துழைப்புகளையும் வழங்கும் அரச அதிகாரிகள் உடனடியாக அந்த செயற்பாட்டில் இருந்து அகன்று செல்லுமாறு கோருகிறோம். சட்டத்தின் மீதான பாரிய மரியாதைக்குரிய நிறுவனங்கள் வரை இந்த பேரழிவு பரவியுள்ளது. இனியும் அவர்கள் மறைவானவர்கள் அல்ல. அவர்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் எமக்குத் தெரியும்.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் உடனடியாக போதைப் பொருள் பாவனையில் இருந்து அகன்று செல்ல வேண்டும். உங்களை கவனித்துக் கொள்ள நாம் தயார். அவர்கள் எமது பிள்ளைகள். பொருளாதாரப் பிரச்சனை, விளையாட்டு,கலாச்சாரம்.இசை, பொழுதுபோக்கு என எதுவும் இன்றி ஒரே பொழுது போக்கு போதையாக இருப்பது என அடிமையானவர்கள் கருதுகிறார்கள். அது அவர்களுடைய தவறல்ல. சிறந்த விளையாட்டுக் கலாச்சாரம் உருவாக்கப்படவில்லை. பல தசாப்தங்களுக்கு முன்னர் விளையாட்டுக் கலாசாரம் காணப்பட்டது. இன்று அவ்வாறான கலாச்சாரம் இல்லை. எனவே அந்த இளைஞர்களுக்கு குறை சொல்லிப் பயனில்லை. எனவே பொழுதுபோக்கு சார்ந்த இடங்கள், பாடல், இசை, கலாசாரம், சமூகம் தொடர்பான பிணைப்பு தொடர்பான சமிக்ஜையை அவர்களுக்கு வழங்க வேண்டும். அதற்காக பாரிய திட்டமொன்றை ஆரம்பிக்க இருக்கிறோம்.

அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது எமது பொறுப்பாகும். சுயமாக சென்று புனர்வாழ்வு பெறக் கூடிய சில இடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமது பிள்ளையை ஒப்படைக்குமாறு தாய்மாருக்கு அழைப்பு விடுக்கிறோம். உங்கள் பிள்ளையை மீட்டு உங்களிடம் கையளிப்போம். வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இதற்காக அதிக நிதி ஒதுக்கப்படும். பல புனர்வாழ்வு மையங்களில் இருந்து இளைஞர்கள் தப்பிச் செல்கிறார்கள். இதனைத் தடுக்க விஞ்ஞான ரீதியான

தொடர்ச்சி▼









# போதைப்பொருள்களுக்கு எதிரான சவாலை எதிர்கொள்ள நாம் தயார்

தொடர்ச்சி▲

புனர்வாழ்வு திட்டமொன்றை தயாரித்துள்ளோம்.

போதைப் பொருள் விற்பனை செய்வோர் சரணடைய வேண்டும். தொடர்புள்ள சகல அரச நிறுவனங்களையும் இணைத்து தேசிய செயற்பாட்டு மையம் ஒன்றை உருவாக்க இருக்கிறோம். சுங்கம், குடிவரவு குடியகல்வு திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்,போலிஸ், இராணுவம். புலனாய்வுப் பிரிவு என்பன உள்ளடங்கிய மையம் உருவாக்கப்படும். தப்பிச் சென்றவர்கள் மறைந்துள்ள நாடுகள் எமக்குத் தெரியும். இருக்கும் இடமும் தெரியும். எனவே அவர்கள் சரணடைய வேண்டும். சுற்றிவளைப்புகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம். எமது நாட்டையும் சமூகத்தையும் பிள்ளைகளையும் ஒரு சிறு குழுவுக்கு இறையாக்க முடியாது.

பிக்குமார் மற்றும் மதத்தலைவர்கள் உள்ளடக்கிய செயற்பாடு தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். எமது மக்கள் மதத்தலங்களுடன் அதிகமான தொடர்பை வைத்துள்ளனர். இந்த பேரழிவுக்கு எதிரான பிரதான ஆயுதமாக அதனை பயன்படுத்தலாம். பலங்கொடை பகுதியில் போதைக்கு அடிமையானவர்களின் மரண வீடுகளுக்கு வர மாட்டோம் என பள்ளிவாசல் மௌலவிமார் சொல்வதை பார்த்தோம். அதே போன்று சகல மதத் தலைவர்களும் இந்த பேரழிவுக்கு எதிரான நிலைப்பாட்டை உருவாக்கினால் இதனை தோற்கடிக்கலாம். இதிலிருந்து மீள போராடுவோம். அதற்கு மதத் தலைவர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

ஊடகங்கள் விழுமியங்களுக்கு உட்பட்டு செயற்படாத துறையாக காணப்படுகிறது. போட்டிக்காக செயற்படுகின்றன. ஆனால் போதைப் பொருட்கள் தொடர்பான செய்திகளை வெளியிடுவதில் கட்டுக்கோப்புடன் ஊடகங்கள் செயற்படும் என எதிர்பார்க்கிறேன். இதனை ஊக்கப்படுத்தும் வகையிலான செய்தி வெளியிடப்படுவதை காண்கிறோம். சிலருடான தொலைபேசி உரையாடல்கள் ஊடாக அவர்களை வீரர்களாக காண்பிக்கப்படுகின்றனர். ஊடக நிறுவன உரிமையாளர்களை சந்தித்து பேசிய போது பெரும்பாலானவர்கள் இதற்கு ஒத்துழைக்க உடன்பாடு தெரிவித்தனர்.

புனர்வாழ்வு நடவடிக்கையில் பல



அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. சகல தரப்பினரையும் இணைத்து புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க இருக்கிறோம்.

போதைப் பொருள் ஒழிப்பில் அரசியல் அதிகாரத்திற்கு முக்கிய பங்கு உள்ளது. அரசியல்வாதிகளுடன் நெருங்கிப் பழகி அவர்களின் தேவைகளை நிறைவேற்றி மறைவான அதிகாரத்தை போதை பொருள் வர்த்தகர்கள் பெறுகிறார்கள். சில அரச பொறிமுறையில் நுழைந்து விசாரணைகளை தடுக்கவும் வீதியில் சுட்டுக் கொலை செய்வதற்கும் இந்த மறைவான அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

எமது பொலிஸார் திறமையானவர்கள். சர்ச்சைக்குரிய விடயங்களில் துரிதமாக குற்றவாளிகளை கைது செய்யும் திறமை அவர்களுக்கு உள்ளது. கண்டுபிடிக்கப்படாத அனைத்து குற்றங்களின் பின்னாலும் அரசியல்வாதியின் பாதுகாப்பு உள்ளது. லசந்த கொலை, தாஜ/தீன் கொலை,ரோகன குமாரவின் கொலை, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் ஏன் தீர்க்கப்படவில்லை. அரசியல் பாதுகாப்பினாலே அவை கண்டுபிடிக்கப்படவில்லை. பொலிஸாருக்கு உரிய அதிகாரம் வழங்காமையினால் இந்த நிலை ஏற்பட்டது.

போதைப்பொருள் ,பாதாள உலகம் என்பன அவ்வாறு தான் வளர்ச்சியடைந்தன.

அவர்களின் முதலாவது அதிகாரமான அரசியல் அதிகாரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. சில குற்றச்செயல்கள் சிறைச்சாலைகளுக்குள் இருந்து முன்னெடுக்கப்படுகிறது. சில தவறுகளை சிறைச்சாலையில் இருந்து நேரலையில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வெலிகம சம்பவம் அவ்வாறான ஒன்று.

சிலர் பயத்தினாலும் சிலர் பணத்தினாலும் இதற்கு உதவுகிறார்கள். இலங்கை பொலிஸ் இதிலுள்ள ஆபத்தை அறிந்த நிலையில் இதனை முறியடிக்க அர்ப்பணித்துள்ளது.

எதிர்காலத்தில் மேலும் சில பொலிஸ் அதிகாரிகள் குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படலாம். முறையாக செய்தால் விமர்சனம் வரும். உங்களுக்கு சுதந்திரமாக செயற்பட அதிகாரத்தை வழங்குகிறோம். இந்தப் பேரழிவை முடிவுக்குக் கொண்டு வருவோம்.

இந்தச் செயற்பாட்டில் மக்களை இணைத்துச் செயற்பட வேண்டும். கிராமம் வரையாக பரந்த மக்கள் இயக்கம் முன்னெடுக்கப்படும். முன்பு குற்றவாளிகளை ஊரில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் இணைத்துக் கொள்வதில்லை. ஆனால் இன்று அவர்கள் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக தேசிய கொடிஏற்றுகின்றனர். கிராம சேவகர் மட்டம் வரை பரந்த மக்கள் இயக்கம் உருவாக்கப்படும். அது தான் இந்த பேரழிவுக்கு எதிரான பிரதானமான பாதுகாவலராகும். பொது மக்கள் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மக்களிடம் இருந்து இதற்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்.

முழு நாடுமே ஒன்றாக இந்த முன்னெடுப்பில் இணைய வேண்டும். அரசாங்கத்தினாலோ பொலிஸாரினாலோ அரச பொறிமுறையினாலே இதனை தனியாக மேற்கொள்ள முடியாது. இதற்கு எதிராக பாரிய மக்கள் இயக்கத்தை உருவாக்கி வருகிறோம். எனவே போதைப்பொருள்களை விற்பனை செய்யும் மற்றும் அடிமையானவர்கள் அதிலிருந்து அகன்று செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த மக்கள் இயக்கம் இந்த மாயச் சூறாவளியை அழித்தொழிக்கும். இந்த மாயச் சூறாவளியில் இருந்து எமது பிள்ளைகளையும் சமூகத்தையும் நாட்டையும் மீட்போம்.” – என்றார்.

மல்வத்து அஸ்கிரிய அனுநாயக்க தேரர்கள் தலைமையிலான மகா சங்கத்தினர், கத்தோலிக்க, இந்து மற்றும் இஸ்லாமிய மதத் தலைவர்கள், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட அமைச்சர்கள், ஆளுநர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் ஏனைய இராஜதந்திரிகள், ஜனாதிபதியின் செயலாளர் , அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள், பாதுகாப்புப் படைகளின் பிரதானிகள், அறிஞர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனக் குறிப்பிட்டிருந்தேன்.

ஆட்சிக் காலத்தில் அரசியலில் பெரும் கில்லாடியாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இத்தகைய ஊழல, மோசடி வழக்குகளில் மாட்டுவதற்கான வாய்ப்புகள் இப்போதைய அரசுக்கு இல்லை என்றுதான் பொதுவாகப் பேசப்பட்டு வந்தது. ஆனால் அவர் தொடர்பிலும், அவருக்கு எதிரான ஒரு முக்கியமான விடயம் சட்ட ரீதியாகக் கட்டவிழ்வதாகத் தெரிகிறது.

அது, நேரடியாக தேசிய மக்கள் சக்தி தரப்பு மட்டுமல்லாமல், ஜனாதிபதி சட்டத்தரணியாக சுமந்திரனும் சம்பந்தப்பட்ட விடயம் என்பதுதான் இதில் முக்கியமானது.

2020 ஆம் ஆண்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த கிலோவுக்கு 50 ரூபா என்ற வரி திடுதிப்பென விலக்கப்பட்டது. ஆனால் அந்த விலைக் குறைப்பு சீனியின் விற்பனை விலையில் செய்யப்படவில்லை. ஐம்பது ரூபா வரியைக் கட்டாமல் சீனியைக் கப்பல்கள் கணக்கில் இறக்குமதி செய்த பெரும் முதலாளிமார், அந்த 50 ரூபா வரியையும் சேர்த்துத் தீர்மானிக்கப்பட்ட விலையில் அந்தச் சீனியை விற்றுத் தள்ளினர். அதனால் அரசாங்கத்துக்கு 1,500 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை நஷ்டம் ஏற்பட்டது.

இது பற்றிய மேலதிக விவரங்கள் இன்றைய காலை முரசின் ஆசிரியர் தலையங்கத்தில் விவரிக்கப்பட்டு இருக்கின்றன. அதை வாசித்தால் வழக்கின் பின்புலம் தெரியும்.

இந்த வழக்கை இப்போதைய அமைச்சரும், வழக்குத் தொடுக்கப்பட்ட சமயம் எதிரணியில் இருந்தவருமான சுனில் ஹந்துன்னெத்து தாக்கல் செய்திருந்தார். அவரது சட்டத்தரணி சுமந்திரன்தான்.

இந்த வழக்கின் ஆரம்பத்தில், இந்த வரி விதிப்பை திடீரென நிதி அமைச்சு விலக்கிக் கொண்ட சமயம் அப்போதைய நிதி அமைச்சராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ எதிர்மனுதாரராக மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தார். அப்போது அவருக்காக சட்டமா அதிபரின் பிரதிநிதி நீதிமன்றில் முன்னிலையாகி வந்தார்.

ஆயினும் நிதி அமைச்சர் பதவியில் இருந்து 2022 இல் மஹிந்த ராஜபக்ஷ விலகிக் கொண்ட பின்னர் புதிய நிதி அமைச்சர் மற்றும் அப்போது இருந்த நிதியமைச்சு அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு மாற்றப்பட்டு அவர்கள் சார்பிலேயே சட்டமா அதிபரின் பிரதிநிதி நீதிமன்றத்தில் பிரசன்னமாகி வந்தார். தாம் நிதியமைச்சர் பதவியில் இருந்து இறங்கிய பின்னர், தமக்கும் இந்த வழக்குக்கும் தொடர்பில்லை என்ற நிலைப்பாட்டில் மஹிந்த ராஜபக்ஷ இருக்க, அவருக்கு இந்த வழக்குத் தொடர்பில் அழைப்பாணை அனுப்புவது போன்ற விடயங்களை நீதிமன்றமோ மனுதாரரோ செய்யவில்லை.

ஆனால் நேற்று இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இந்த விடயத்தை அவதானித்த பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன, ஏன் இந்த விவகாரம் நடந்த சமயம் நிதி அமைச்சராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்பப்படவில்லை என்று கேள்வி எழுப்பினார். எது, எப்படியாயினும், திடீர் வரி விலக்கு செய்யப்பட்ட சமயத்தில் அதனைச் செய்த நிதி அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்தவர் மஹிந்த ராஜபக்ஷதான், ஆகவே அவருக்கு தொடர்ந்து அழைப்பாணை அனுப்புங்கள், அவரது தனிப்பட்ட விலாசத்துக்கு அழைப்பாணை அனுப்பப்பட வேண்டும் என்று பிரதம நீதியரசர் வலியுறுத்தி உத்தரவிட்டார் எனத்தெரிய வருகிறது.

இந்த வழக்கில் தாம் சம்பந்தப்படாதவர் போல ஒதுங்கி இருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்ப பிரதம நீதியரசர் விடுத்திருக்கும் உத்தரவு மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஊழல், முறைகேடுகள், மோசடி, தவறான நிர்வாகம் தொடர்பான விடயத்தில் விரிக்கப்பட்ட வலையாகவே எனக்குத் தோன்றுகின்றது.

விவகாரம் நீதிமன்றத்தில் - அதுவும் உயர் நீதிமன்றத்தில் - இருப்பதால் இதற்கு மேல் அதிகம் வாய் திறக்க நான் விரும்பவில்லை.

ஆயினும் அவ்வப்போது சட்ட விடயங்களை ஒட்டி நான் கூறுகின்ற 'காலைச் சுற்றிய பாம்பு கொத்தாது விடாது' என்ற கூற்றை மட்டும் மஹிந்த தரப்பினருக்கு முன்னெச்சரிக்கையாக கூறி வைக்க விரும்புகிறேன்.

தமிழ்த் தரப்புகளுக்கு சுவாரஸியம் மிகுந்த இன்னும் இரண்டொரு நீதி மன்றச் செய்திகள் உள்ளன. அவற்றை நாளை பார்ப்போம்.

★ ★ ★

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களை அவரது யாழ்மாவட்ட அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார் என்றும் -

நாடாளுமன்றில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கான பிரேரணைகள், விவாதங்களின் போது உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள், விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்றும் - செய்திகள் வெளியாகின.

சிறிதரன் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற காரணத்தினால், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு உட்பட்ட பிரதேச சபைகளின் தலைவர்களை கலந்துரையாடுவதற்காக அவர் அழைத்திருப்பார் என நினைக்கிறேன்.

யாழ் மாவட்டத்துக்கு வெளியில் இருந்து யாரும் இந்த கூட்டத்திற்கு வராதமைக்கு அது காரணமாக இருக்கலாம்.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்பான்மையான பிரதேச சபைகளை சிறிதரன் எம்.பியின் இலங்கைத் தமிழரசு கட்சியே கைப்பற்றி இருப்பதால், அவற்றின் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்களின் தலைகளை அந்த சந்திப்பு தொடர்பான படத்தில் தேடிப் பார்த்தேன். அதிகம் காணவில்லை.

அவரது சின்ன ஜமீனான கிளிநொச்சி பிரதேசத்துக்கு உட்பட்ட 3 பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதி தவிசாளர்களே அங்கு பிரசன்னமாகி இருந்தனர். மற்றைய சைக்கிள் - சங்கு கூட்டணி கைப்பற்றிய பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள் பெரும்பாலும் வந்திருந்தனர். தமிழரசு கட்சியின் வலி வடக்குப் பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் மாத்திரமே குடாநாட்டுப் பக்கத்தில் இருந்து கூட்டத்துக்கு வந்த தமிழரசு கட்சிப் பிரமுகராக இருந்தார்.

ஏனையோர் ஏன் வரவில்லை என்று தெரியவில்லை. கட்சியின் ஏதேனும் தரப்பிலிருந்து இந்தக் கூட்டத்திற்குப் போக வேண்டாம் என்று அல்லது போவது தங்களுக்குப் பிடிக்கவில்லை என்று யாராவது தெரிவித்தார்களா எனத் தேடிப்பார்த்தேன். அப்படி ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை. பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதி தவிசாளர்களான தமிழரசு கட்சிப் பிரமுகர்கள் தத்தம் பாட்டிலேயே இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத முடிவை எடுத்திருக்கிறார்கள் என்று தெரிய வந்தது.

இதற்கும், சி.வி.கே. - சுமந்திரன் -சாணக்கியன்தலைகள்உருட்டப்படுமோ தெரியவில்லை.

கட்சிக்குள் தமது நிலைமையை அரசியல் தலைவர்கள் எடை போடுவதற்கு இத்தகைய கூட்டங்கள், சம்பவங்கள் நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இன்னும் சில விடயங்கள் இருக்கின்றன. இரண்டொரு நாள்களில் பார்ப்போம்.

★ ★ ★

## முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைத் தேர்தல் தாமதிப்பது வருந்தத்தக்கது என நாங்கள் சொல்லியிருக்கின்றோம். மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரியிருக்கின்றோம்.

மாகாண சபைத் தேர்தல் விரைந்து நடக்க வேண்டும் என்பது எங்களது எதிர்பார்ப்பு. இதில் முதலமைச்சர் வேட்பாளரைப் பொறுத்த வரையில் எங்களது கட்சியின் தெளிவான நிலைப்பாடு, கட்சிக்குள்ளே இருந்துதான் நாங்கள் ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவுசெய்வோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் வெளியில் இருந்து யாரையும் இறக்குமதி செய்ய மாட்டோம். எனினும், எங்களுடைய கட்சியில் அங்கத்தவராக இருப்பவர்தான் கட்சி என்றும் எடுக்க மாட்டோம். யாழ்ப்பாணத்திலோ – வடக்கு மாகாணத்திலோ எங்களோடு இணங்கிச் செயற்பட்டுக் கட்சியோடு இருந்தவர்கள், கட்சிக்காக வேலை செய்தவர்கள், உழைத்தவர்கள் என அவர்களில் ஒருவரைத்தான் நாங்கள் முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவு செய்வோம்.

இதிலே தெளிவான ஒரு நிலைப்பாடு என்னவென்றால் கட்சியோடு தொடர்புடைய – கட்சிக்குப் பங்களிப்புச் செய்த பொருத்தமான எவராவது ஒருவரைத்தான் எங்களுடைய முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்குவோம்." – என்றார்.

# தமிழரசுக்கும் ஒற்றையாட்சிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது!

## ஊடகவியலாளர்களிடம் சி.வி.கே. தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சி எந்தக் காலத்திலும் ஒற்றையாட்சியை ஏற்றது கிடையாது. ஒற்றையாட்சியை ஏற்றவர்கள் நாங்கள் அல்லர். தமிழரசுக் கட்சிக்கும் ஒற்றையாட்சிக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஏக்கிய ராஜ்ஜிய, ஒற்றையாட்சி என்பவற்றை நாங்கள் ஏற்கப் போவதில்லை என்பதை ஏற்கனவே அறிவித்து விட்டோம். அப்படியிருக்கத் திரும்பத் திரும்ப இவைகளைப் பற்றிப் பேசுவதில் எந்த அர்த்தமுமே கிடையாது.

புதிய அரசமைப்பைக் கொண்டு வருவது தொடர்பாக இந்த அரசு உத்தியோகபூர்வமாக எதனையும் தெரிவிக்கவில்லை. ஆக அரசு உத்தியோகபூர்வமாக எதனையும் சொல்லு கின்ற போது இதைப் பற்றி பேசலாம். ஆனாலும் ஒற்



றையாட்சியையும் ஏக்கிய ராஜ்ஜியவையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

இதற்கு மேலேயும் எமக்கு எதிராகப் பிரசாரம் செய்வது ஓர் அரசியல் தந்திரோபாயமே தவிர அது யதார்த்தம் அல்ல.

எங்களுடைய கட்சியின் கொள்கையும் தெளிவான நிலைப்பாடும் ஒற்றையாட்சியல்ல. அப்படியிருக்க எவ்வாறு நாங்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டதாகப் பிரச்சாரம் செய்ய முடியும்.?

ஏக்கிய ராஜ்ஜிய என்றால் அது ஒற்றையாட்சி அல்ல. அது ஒருமித்தது என்றுதான் வருகின்றது. எனினும், ஏக்கிய ராஜ்ஜிய, ஒருமித்தது என்ற இந்த விடயங்களில் தெளிவு இல்லை. ஆனாலும், அதை நாங்கள் ஏற்றுக்கொண்டதாகவும் இல்லை. எனினும், அதனடிப்படையில் சில விடயங்களைப் பரிசீலிக்கலாம் என இப்போதைய ஆட்சியாளர்கள் சொல்லியிருந்தனரே தவிர ஏக்கிய ராஜ்ஜியவைக் கொண்டு வருவதாக அவர்கள் சொன்னதும் கிடையாது.

ஆகையினால் இப்போது எங்களுக்கு எதிராக முன்வைக்கின்ற பிரச்சாரங்களை நாங்கள் மறுதலிக்கின்றோம்.

உண்மையில் அப்படியொரு புதிய அரசமைப்பு வருகின்ற போது நிச்சயமாக எல்லாக் கட்சிகளோடும் நாங்கள் கூட்டாக இணைந்து கூட்டாக ஒரு நிலைப்பாட்டை எடுப்போம் என்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகின்றேன்.

புதிய அரசமைப்பை இந்த அரசு முன்னெடுக்கின்ற போது நாங்கள் தனித்துக் கருத்துக் கூற இருந்தாலும் கூட அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளோடும் சேர்ந்து ஒருமித்த கருத்தை முன்வைப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவோம்.

அத்தகைய எண்ணம், சிந்தனை எங்களுக்கு உண்டு. அதற்மைய நடவடிக்கைகளை எடுப்போம். இது சம்பந்தமாக கட்சி ரீதியிலும் மத்திய செயற்குழுவிலும் பேசுவோம்." – என்றார்.

---



### யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது கடந்த 3 நாள்களில் போதைப் பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

160 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 2 சந்தேகநபர்களும், போதை மாத்திரை, ஹெரோயின், மாவா என்பனவற்றுடன் 6 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை நடத்தி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

---

### அரச எதிர்ப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா மகாஜன கட்சி என்பன இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்தப் பேரணியில் பங்கேற்காதிருக்கத் தீர்மானித்தள்ளது.

இந்நிலையிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமான்ன, ஐக்கிய மக்கள் சக்தியை மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரச எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் முடிவெடுக்கும் உரிமை ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ளது. அந்த உரிமையை நாம் மதிக்கின்றோம். எனினும், பிரதான எதிர்க்கட்சிக்குரிய பொறுப்பை அந்தக் கட்சி நிறைவேற்றும் என நம்புகின்றோம்.

நுகேகொடை கூட்டத்தில் அக்கட்சி பங்கேற்கும் என நம்புகின்றோம். இன்னும் காலம் உள்ளது. சில வேளை பங்கேற்காவிட்டால் அது அந்தக் கட்சிக்கே பெரும் பாதகமாக அமையக்கூடும்." – என்றார்.



## 2029 இல் மொட்டுக் கட்சியின்

# ஜனாதிபதி வேட்பாளராக நாமலே களமிறங்குவார்!

### லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கூறுகின்றார்

“வரும் 2029 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் பட்சத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் நாமல் ராஜபக்‌ஷவே வேட்பாளராக களமிறங்குவார். தற்போதைய சூழ்நிலையில் எமது கட்சியில் அவரே சிறந்த வேட்பாளராக உள்ளார்.”

– இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் கூறுகையில்,

“ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் காலம் உள்ளது. சவாலை ஏற்கக்கூடிய தலைவருக்கே நாட்டு மக்கள் ஆதரவளிப்பார்கள். கட்சிகளும் இத்தகைய நபரையே ஆதரிக்கும்.

கடந்த முறை நெருக்கடியான சூழ்நிலையிலும் நாமல் ராஜபக்‌ஷ போட்டியிட்டார். எமது கட்சியில் தற்போதுள்ள சிறந்த வேட்பாளர்தான் நாமல் ராஜபக்‌ஷ. அவர்தான் ஜனாதிபதி வேட்பாளர். தன்னை அவர் பலப்படுத்திக் கொண்டு வருகின்றார்.” – என்றார்.

# வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாளக் குழுவினருக்கு வலை!

## 82 பேருக்குச் சிவப்பு பிடிவிறாந்து என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாள உலகக் குழு உறுப்பினர்களை நாட்டுக்கு கொண்டு வந்து, சட்டத்தின் முன் நிறுத்துவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“216 பேருக்கு எதிராக சிவப்பு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் அல்லர். சுமார் 82 பேரே பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையவர்கள்.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களில் 17 பேர் இதுவரையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களில் அதிகளவானோர் டுபாயிலேயே இருக்கின்றனர். சிலர் வெளிநாட்டு சிறைகளில் உள்ளனர். இவர்களைக் கொண்டு வருவதற்குரிய இராஜதந்திர நடவடிக்கையும் இடம்பெறுகின்றது.



இந்தோனேசியாவில் முன்னெடுக்கப்பட்டது போல் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் இடம்பெறும்.

இந்த நாட்டில் குற்றச்செயல்களில் ஈடுபட்டு விட்டு வெளிநாடுகளில் பதுங்கி வாழ்வதற்கு இடமளிக்கமாட்டோம். அவர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இதற்கு நீதி அமைச்சின் ஒத்துழைப்பும் கிடைக்கப் பெற்று வருகின்றது.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தாமதத்தால் மறுக்கப்படும் நீதி

இலங்கையில் நீதி நிர்வாகத்தை பேணுகின்ற நீதித்துறை குறித்து இப்போது பொதுவில் உயர்வான அபிப்பிராயம் நிலவுகின்றது. ஊழல், முறைகேடுகள், குளறுபடிகள், பக்கச் சார்புப் போக்கு, பாகுபாடு போன்றவை இல்லாமல், இயன்றளவுக்கு நீதியை நேர்மையாக நிலை நாட்டுவதற்கு நீதித்துறை காத்திரமாக பங்காற்றுகின்றது என்ற பொதுக் கருத்தோட்டம் மக்கள் மத்தியிலும், அவதானிகள் மத்தியிலும் உண்டு. நீதித்துறை மீதான ஆட்சித் துறையின் செல்வாக்கும் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஊடுருவவில்லை என்ற ஒரு நிலைப்பாடும் இருக்கின்றது.

ஆயினும், இலங்கையின் நீதித்துறைக்கே இயல்பான காலதாமதம் என்ற மோசமான விவகாரம்தான் அதன் மேன்மைத்துவத்தைத் தொடர்ந்தும் பாழாக்கி வருகின்றது என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும்.

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்ததில், ஆட்சி அதிகாரத்தை வைத்திருந்த தரப்புகளினால் இழைக்கப்பட்ட தவறான ஆட்சி நிர்வாகம், ஊழல், மோசடிகள், முறைகேடுகள், பொறுப்பின்மை போன்றவை முக்கிய காரணம் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம்.

நாட்டின் பொருளாதாரம் கழுத்தை இறுக்கும் நெருக்கடி நிலைக்கு வரும் சமயத்தில் கூட, இத்தகைய ஊழல் மோசடிகள் தாராளமாகத் தொடர்ந்தன என்பதை மறுக்க முடியாது.

அந்த வகையில் ஒன்றுதான் 2020 இல் இடம் பெற்ற சீனி இறக்குமதி ஊழலாகும். அதன் மூலம் அரசு 1,500 கோடி ரூபாவுக்கு மேல் இழப்பை எதிர்கொண்டது.

சீனிக்கு அதுவரை விதிக்கப்பட்டிருந்த கிலோவுக்கு 50 ரூபா என்ற வரி திடீரென ஒரு நாள் அடியோடு விலக்கப்பட்டு, ஆக கிலோவுக்கு 25 சதம் மாத்திரம் வரியாக அறவிடப்படும் அறிவிப்பு வெளியானது. ஆனால் அப்படி வரி விலக்குப் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் விற்பனை விலை குறைக்கப்படவே இல்லை. ஆக இந்த வரியை அரசாங்கம் விலக்கியமையினால் அச்சமயத்தில் சீனியை இறக்குமதி செய்த வர்த்தகர்களே, அந்த கிலோவுக்கு ஐம்பது ரூபா என்ற லாபத்தை மேலதிகமாகவும் சூறையாடும் நிலைமை ஏற்பட்டது. வரி மூலம் அரசாங்கத்திற்கு வரவேண்டிய ஆயிரத்து 500 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை தனியார் இறக்குமதியாளர்களின் கஜானாவுக்கு மேலதிகமாகப் போய்ச் சேர்ந்தது.

இந்த ஊழல் மூலம் அந்தச் சமயத்தில் 1,590 கோடி ரூபாவை சூறையாடிய தரப்புகளிடமிருந்து அவற்றை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி இப்போது தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் அமைச்சராக இடம்பெற்றிருக்கும் சுனில் ஹந்தின்நெத்தி அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு நேற்று பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன, நீதியரசர்கள் குமுதினி விக்கிரமசிங்க, மஹிந்த சமயவர்த்தன ஆகியோர் முன்னிலையில் எடுக்கப்பட்டு, அடுத்த வருடம் ஜனவரி 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அன்றைய தினத்திலும் கூட இந்த விடயம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படப் போவதில்லை. அதன் பின்னர் உயர்நீதிமன்றத்தின் பல படிநிலைகளைத் தாண்டி இந்த விடயம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, முடிவு வெளியிடப்படும் போது மேலும் இரண்டொரு ஆண்டுகள் தாண்டி இருக்கும் என்பது இலங்கையின் நீதித்துறை ஒழுங்கமைப்பில் சாதாரண விடயமாகும்.

நாட்டில் மிக மோசமான ஊழல் குற்றம் ஒன்று தொடர்பில் - வெளிப்படையாக மக்களுக்கு அது ஒரு பெரும் குற்றம் என்று தெரிகின்ற ஒரு விவகாரம் தொடர்பில் - நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றம் விசாரணை செய்து முடிவெடுப்பதற்கு ஏழு, எட்டு ஆண்டுகள் தாமதமாகுமாயின் அது எவ்வாறு தகுதியுள்ள நீதி முடிவாக இருக்கும் என்பதுதான் கேள்வி.

‘தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி ஆகிவிடும்’ என்பதுதான் நீதித்துறையின் அடிப்படைக் கோட்பாடு.

ஆகவே இலங்கையின் நீதித்துறையும் அதை பரிபாலிப்பவர்களும் எவ்வளவுதான் நீதியாளர்களாக - மேன்மையாளர்களாக - இருந்தாலும், இலங்கையில் நீதி பரிபாலிக்கப்படும் முறைமை சரியான ஒழுங்குக்கு மாற்றப்படும் வரை இலங்கையில் நீதித்துறை மேன்மை அடைவது என்பது எதிர்பார்க்க முடியாத விடயமாகத்தான் இருக்கும்.





# வடக்கில் போதைப்பொருளை அடியோடு ஒழிக்க வேண்டும்!

## ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து

'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாடு உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதனை நாமும் சரிவரப் பயன்படுத்தி எமது வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருளை அடியோடு ஒழிக்க வேண்டும். இளைய சமூகத்தை அதிலிருந்து பாதுகாப்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

– இவ்வாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மக்களை நோக்கிய நிர்வாகம் என்ற அடிப்படையில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் முன்னெடுக்கப்பட்டு வரும் சந்திப்பு, 'அபிவிருத்தி நோக்கிய பயணம் – புங்குடுதீவு 2025' என்னும் தொனிப்பொருளில் புங்குடுதீவு வட இலங்கை சர்வதோய மாநாட்டு மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் புங்குடுதீவு மக்களால் பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. வீதித் திருத்தங்கள், கடற் போக்குவரத்து, இறங்குதுறை புனரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களங்



களுக்குச் சொந்தமான வீதிகளின் புனரமைப்புத் தொடர்பில் தொடர்புடைய அதிகாரிகள் பதிலளித்தனர். உள்ளூர் வீதிகள் குறிப்பாக பிரதேச சபைக்குச் சொந்தமான 139 வீதிகளில் முன்னுரிமை அடிப்படையில் 10 வீதிகள் திருத்தத்துக்கான முன்மொழியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு இவற்றை புனரமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. குடிநீர் விநியோகக் குழாய்கள் பொருத்தப்பட்டும் குடிநீர் வழங்கப்படாமை தொடர்பில் சுட்டிக்காட் டப்பட்டது.

மருத்துவமனையின் தேவைகள், வங்கிச் சேவைகளின் மேலதிக தேவைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன. குறிப்பாக கல்வி தொடர்பில் மிக நீண்ட நேரம் ஆராயப்பட்டது. பாடசாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. குறிப்பாக எதிர்காலத்தில் பாடசாலைகளை கொத்தணிகளாக்கி ஆளணிகளைப் பங்கிடுவதன் சாதக பாதகங்கள் தொடர்பிலும் நேற்றைய கலந்துரையாடலில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

மாணவர்கள் பாடசாலை நேரங்களில் விளையாட்டுக்களில் ஈடுபடுவது, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது பதிலளித்த ஆளுநர், ஜனாதிபதி தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதை ஒழிப்பு நடவடிக்கை ஊடாக எமது வடக்கு மாகாணத்தில் இதனைக் கட்டுப்படுத்தலாம் என்று குறிப்பிட்டதுடன் பொலிஸாரின் செயற்பாடுகளிலும் மிகப் பெரிய மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

இந்த மக்கள் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதேச செயலர், பிரதேச சபையின் உப தவிசாளர், பிரதேச சபைச் செயலர், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.











# மந்திகை வைத்தியசாலை முன் வீதியால் கனரக வாகனங்கள் செல்ல முற்றாகத் தடை

## பருத்தித்துறை பிரதேச சபை அமர்வில் தீர்மானம்

**(வடமராட்சி நிருபர்கள்)**

மந்திகையிலுள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் முன் வீதியில் கனரக வாகனங்கள் செல்வ தற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள் ளது.

பருத்தித்துறை பிரதேச சபை அமர்வில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு அதன் தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் நேற்று முன்தினம் காலை 9:45 மணியளவில் பருத்தித்துறை பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆரம்பமானது.


இதில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் முன் வீதியால் கனரக வாகனங்கள் செல்வதைத் தடை செய்வதென்று தீர்மானிகயகப்பட்டது.

சபை அமர்வில் பருத்தித்துறை நகர சபை மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை என்பன இணைந்து கழிவுகளை ஓரித்தில் கொட்டி தரம் பிரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டு பருத்தித்துறை பிரதேச சபை, நகர சபையுடன் இணையாது தனியாகவே கழிவை தரம் பிரிப்பது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

வரவு – செலவுத் திட்ட செயற்பாடுகள் தொடர்பாகவும், பருத்தித்துறை பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பா கவும் சபையில் ஆராயப்பட்டது.

வீதிப் போக்குவரத்துக்குப் பாதிப்பாக வுள்ள மரங்கள் மற்றும் கட்டுமானங்களை அகற்றுவது தொடர்பாக ஆராயப்பட்டு வீதிப் பயணிகளுக்கு இடையூறாகவுள்ள கட்டுமானங்கள் மற்றும் மரங்களை அகற்றுவதற்கு உரியவர்களுக்கு அறிவித்தல் வழங்கி அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பதென்றும், பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களைத் தடை செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு காலை 6:30 தொடக்கம் 8:00 மணி வரையிலும், பிற்பகல் 12:30 தொடக்கம் 2:30 மணிவரையிலும் கனரக வாகனங்கள் செல்வதைத் தடை செய்வதென்றும், உரிய அறிவித்தல் பதாதைகள் இடுவதென்றும், மந்திகையி லுள்ள பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை முன்வீதியால் கனரக வாகனங்கள் செல்வதை முற்றாகத் தடை செய்வது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

சபை அமர்வில் அனைத்து உறுப்பி னர்களும் கலந்துகொண்டனர்.







# முத்து நகர் விவசாயிகள் தொடர்ந்து போராட்டம்

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் தொடர்ந்து 44 ஆவது நாளாக நேற்றும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பு தொடராக தங்களுக்கு நீதி வேண்டியும் அபகரிக்கப்பட்ட தங்களின் விவசாயக் காணிகளை மீளத் தரக்கோரியும் போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் தெரிவிக்கையில் –

எங்களது விவசாயப் பூமியைத் தனியார் கம்பனிகளுக்கு 'சோலர் பவர்' உற்பத்திக்கு என்ற பெயரில் அநியாயமாக வழங்கி, எங்களது வாழ்வாதாரத்தை அழித்துள்ளனர். இதற்காகப் பல முறை போராடியும் தீர்வுகளை வழங்க மறுக்கின்றனர். எங்கள் விவசாயப் பூமியை நம்பியே வாழ்ந்து வந்தோம். தற்போது ஜீவனோபாயம் நாசமாகியுள்ளது. இதனால் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவது முதல் பல்வேறு நெருக்கடிகளைத் தினந்தோறும் சந்திக்கின்றோம். பொருளாதார கஷ்டங்களையும் எதிர்நோக்கியுள்ளோம். எனவே தீர்வை விரைவில் வழங்குமாறு ஜனாதிபதி, பிரதமரிடத்தில் கோரிக்கை விடுக்கின்றோம். – என்றனர்.









# திருமலை மாவட்ட முன்பள்ளிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாண சிறுவர் முன்பள்ளி பணியகத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான மாகாண ஒதுக்கீட்டின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா நேற்று திருகோணமலை மாநகர மண்டபத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, மாகாண சிறுவர் முன்பள்ளி பணியகத்தின் நிர்வாக பணிப்பாளர் சஹூன் மஜுன், பணியகத்தின் அதிகாரிகள், முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.









# வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தலைவரை உள்செல்ல விடாது தடுத்த பிரதேச சபை உறுப்பினர்கள்

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற போது அங்கு வருகை தந்த மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், கூட்டுறவு பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவை உள்ளே செல்லவிடாது வவுனியா வடக்கு பிரதேசசபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தினர்.

பிரதேச சபையின் அபிவிருத்தி குழு கூட்டத்தில் பிரதேச சபை தலைவரை மட்டும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் உபதவிசாளர் மற்றும் வட்டார உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற ரீதியில் அனைவரையும் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அனுமதிக்க வேண்டும் என தெரிவித்து வவுனியா வடக்கு பிரதேச ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பிரதேச செயலக வாயிலில் கூடியிருந்தனர்.

இதன் பின்னர் அங்கு வருகை தந்த அபிவிருத்தி குழு தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் ஆகியோரை அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு நுழைய விடாது சபை உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தி இருந்தனர்.

இதன் போது தங்களையும் கூட்டத்தில் அனுமதிக்க வேண்டுமென பிரதித் தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருந்தனர். இதன் போது கருத்து தெரிவித்த அபிவிருத்திக் குழுத் தலைவர் –


இது அரசியல் செயற்பாடு அல்ல. நாடாளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட ஒரு நடைமுறை. ஆகவே இந்த விடயம் நாடாளுமன்றத்தின் ஊடாகவே செயல்படுத்தப்பட வேண்டும். ஆகவே இங்கே உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கதைத்து இதற்கான தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் இன்று கூட்டத்திற்கு அனுமதிக்க முடியும். ஆனால் தொடர்ச்சியாக செய்ய முடியாது. அவ்வாறு அனுமதி வழங்க வேண்டும் எனின் நீங்கள் நீதிமன்றத்தை நாட வேண்டும். – என்று தெரிவித்திருந்தார்.

பிரதேச சபை உறுப்பினர்கள் மீண்டும் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக் காட்டி தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில் கூட்டத்திற்கு அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட பின்னர் கூட தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை நெடுங்கேணி பொலிஸார் தடுத்து நிறுத்தியமையால் தவிசாளருக்கும் பொலிஸாருக்கும் இடையில் சிறிது நேரம் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் மீண்டும் கூட்டத்திற்கு அனுமதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.









# வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றத்தின் 35 ஆவது ஆண்டு நினைவுகூரல் நேற்று

## யாழ்ப்பாணம் முஸ்லிம்களால் ஒஸ்மானியாக் கல்லூரியில் முன்னெடுப்பு

**(என்.எம்.அப்துல்லாஹ்)**

1990 களில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கப்பட்ட வடக்கு முஸ்லிம் மக்கள் வெளியேற்றத்தின் 35ஆவது வருட நினைவுகூரலும் ஊடகவியலாளர் மாநாடும் யாழ்ப்பாணம் முஸ்லிம் சமூகத்தின் ஏற்பாட்டில் "எங்கள் நிலம், எங்கள் வாழ்வாதாரம் – எங்கள் அடிப்படை உரிமைகள்"எனும் தொனிப்பொருளில் நேற்று யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஊடகவியலாளர் மாநாட்டில் யாழ்ப்பாணம் முஸ்லிம் சமூகம் சார்பில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி ஏ.எம்.அப்துல் அஸீஸ் (காஸிமி), யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் பி.எஸ்.எம்.சரபுலனாம், மக்கள் பணிமனை தலைவர் மௌலவி பி.ஏ.எஸ். சுப்யான் (யாகூத்தி), மௌலவி அப்துல் மலிக், யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் என்.எம்.அப்துல்லாஹ் மற்றும் யாழ் பெண்கள் அபிவிருத்தி மையத்தின் தலைவர் ஜனாபா சியானா நியாஸ் உள்ளிட்டோர் தமது கருத்துரைகளை முன்வைத்திருந்தனர்.

இன்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட முக்கிய கருத்துக்களின் சுருக்கமாக பின்வரும் அம்சங்களைக் குறிப்பிட முடியும்.

கடந்த 35 வருடங்களாக வடக்கு முஸ்லிம் மக்களின் விவகாரங்கள் போதுமான அளவிற்கு கருத்தில் எடுத்துக் கொள்ளப்படவோ அல்லது அவர்களுக்கான போதுமான தீர்வுகள் கிடைத்து விட்டதாகவோ வடக்கு முஸ்லிம்கள் இன்று வரைக் கருதவில்லை.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை என்றே வடக்கு முஸ்லிம் மக்கள் உறுதியாகத் தெரிவிக்கின்றார்கள். இவ் விடயத்தில் உரிய முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கு இலங்கை முஸ்லிம் மக்கள் சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டியது அவசியமாகும்.

வடக்கிலே ஒரு பலமான சமூகமாக "தமிழ் முஸ்லிம்" மக்கள் "வடக்கு மக்கள்" என்ற அடையாளத்தோடு ஐக்கியமாக ஒன்றினைவதற்கான முன்னெடுப்புக்களை இரு தரப்பினரும் ஆரம்பிக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னைய அரசாங்கங்கள் விட்ட தவறை செய்யாமல் விரைந்து வடக்கு முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் சார்ந்து உரிய தீர்வை வழங்குவதில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

வடக்கு முஸ்லிம் மக்கள் 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டமையானது "இனச்சுத்திரிப்பு நடவடிக்கை என்பதுடன் முஸ்லிம் சமூகத்தின் மீது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல் நடவடிக்கை" என்பதை ஏற்று 1990ஆம் ஆண்டு வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்யும் வகையிலும், எமது மீள்குடியேற்றத்தில் உள்ள தடைகளை கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலும் அமையக் கூடிய "ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நிறுவ வேண்டும்" என்றும் வடக்கு முஸ்லிம் மக்கள் நீண்டகாலமா எதிர்பார்த்திருக்கும் விடயமாகும்.

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திலுள்ள பிரச்சினைகளான காணி, வீடு, உட்கட்டமைப்புக்கள், மீள்குடியேற்ற கொடுப்பனவுகள், வெளியேற்றப்பட்ட போது ஏற்பட்ட சேதங்களுக்கான நஷ்டஈடுகள், கல்வி, வாழ்வாதாரங்கள் மற்றும் தொழி வாய்ப்புக்கள் போன்ற அனைத்திலுமே குறைபாடுகள் காணப்படுகின்றது. இவற்றை வடக்கில் மீள்குடியேறும் முஸ்லிம் மக்களுக்கு முறையாக பெற்றுக் கொடுக்கும் வகையில் உருவாக்கப்படும் புதிய பொறிமுறையான ஜனாதிபதி ஆணைக்குழு உரியசிபாரிசுகளை அரசிற்கு முன்வைக்க வேண்டும் என்பதுடன், உரிய சட்ட மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளை வடக்கு முஸ்லிம் மக்கள் சார்ந்து எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

வடக்குமாகாண முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தில் தமிழ் மக்களினதும், தமிழ் அரசியல் தலைவர்களினதும் ஈடுபாடும், பங்களிப்பும் எதிர்காலத்தில் முழுமையாகக் கிடைக்கப்பெற வேண்டும் என்றும், அதனை பெரிதும் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர்.

மேற்படி வடக்கு முஸ்லிம் மக்களின் 35 ஆவது இனச்சுத்திகரிப்பு நினைவுகூரல் ஊடக மாநாட்டில் உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி பதில் அதிபர் எம்.எஸ். எப்.சப்னா, பாடசாலை ஆசிரியர்கள், மாநகரசபை உறுப்பினர் ஆர்.எவ். றிஸ்லா, சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் மகேந்திரன் திருவரங்கன், இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.












# இலங்கை - பெலாருஸ் இடையிலான நேரடி விமானசேவை நேற்று ஆரம்பம்

## சத்தியலிங்கம் எம்.பி. தொடக்கி வைத்தார்

இலங்கை மற்றும் பெலாருஸ் நாடுகளிற்கிடையிலான நேரடி விமான சேவை நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கலந்து சிறப்பித்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் இலங்கை – பெலாருஸ் நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளராக அண்மையில் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இதன் பிற்பாடு இரு நாடுகளிற்கும் இடையிலான நேரடி விமான சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை அந்த நாட்டு உயர்மட்ட பிரதிநிதிகளிடம் முன்வைத்திருந்தார்.

இதன்மூலம் இரு நாடுகளிற்கும் இடையே கல்வி, பொருளாதாரம், விளையாட்டு, கலாசார மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றில் இணைந்து செயல்பட முடியும் எனவும் தெரிவித்திருந்தார். அத்துடன் அங்கு கல்வி கற்கும் 3,000 இற்கும் அதிகமான இலங்கை மாணவர்கள் இலகுவாக பயணிப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியிலேயே தற்போது இரு நாடுகளிற்கும் இடையிலான நேரடி விமானசேவை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

# காசிநாதன் விமலநாதனின் நூல்கள் வெளியீட்டு வைபவம்

(த.சுபேசன்)

காசிநாதன் விமலநாதனின் “பஜனாமிர்தம்” தொகுப்பு நூல் மற்றும் “இனிய தமிழ் கற்போம் – இந்து சமயம் அறிவோம்” ஆகிய நூல் அறிமுக நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு டச் வீதி, மீசாலை மேற்கு எனும் முகவரியில் உள்ள பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ் இணைய கல்விக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ரஜனிகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் மத்தியஸ்த பயிற்றுநர் ப.சனாதனசர்மா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு ஆசிரிய வாண்மை விருத்தி நிலைய விரிவுரையாளர் சி.இளந்திரையன், அகில இலங்கை அர்ச்சகர் குருமார்சபை தலைவர் க.கிருபானந்தக்குருக்கள், உலக சுகாதார நிறுவன ஆலோசகர் கா.ரகுநாதன், தென்மராட்சி கல்வி வலய சங்கீத பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி ஈ.புனிதகுமாரி, நடன ஆசிரியர் ஸ்ரீ.விமலகுமாரி, வே.தியானந்தராஜகுருக்கள், ப.ஜெயக்குமாரக்குருக்கள், கு.கஜேந்திரக்குருக்கள், வி.பாலகுமாரக்குருக்கள்,

வே.சண்முகராஜகுருக்கள், கு.ரிஷாங்ககுருக்கள் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் மதிப்பீட்டு உரையை தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் க.முருகதாஸ் ஆற்றுவார்.



# திரிவைச்சகுளம் ஆக்கிரமிப்பு விவகாரத்தின் மூலம் மீளவும் இனப்பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்கு இடமளிக்காதீர்!

## வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் ரவிகரன் காட்டம்

தொடர்ச்சி▲

முன்வைக்கப்பட்டது.

அத்தோடு அங்கு வெட்டப்பட்ட பாரியளவான வீரை, பாலை மரங்கள் எங்கு கொண்டுசென்று விற்பனைசெய்யப்பட்டதென்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன், வெட்டப்பட்ட மரங்களுக்குரிய தண்டப்பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

திரிவைச்சகுளத்தை அண்டிய பகுதிகளில் சட்டவிரோதமாக அடர்வனங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக தாம் செயற்பட, தமக்கெதிராக சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடும் பெரும்பான்மை இனத்தவர்கள் உயிர் அச்சுறுத்தல் விடுக்கும்விதமாக கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர் என்றார் அவர்.

அவ்வாறு உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கருத்துக்கள் தெவிக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளன எனவும் அவர் சொன்னார்.

மேலும் ஜனநாயக அரசியலை முன்னெடுத்துள்ள தம்மை வேறு திசை நோக்கி நகர்த்தவேண்டாமெனனத் தெரிவித்த ரவிகரன், திரிவைச்சகுளம் பிணக்கின்மூலம் அடுத்த கட்ட இனப்பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்கு இடமளிக்கவேண்டாமெனவும் கேட்டுக்கொண்டார்.

திரிவைச்சகுளம் என்னும் பகுதி மகாவலி அதிகாரசபைக்கு உட்பட்ட ஒரு பகுதியெனத் தெரிவித்த வவுனியாவடக்கு பிரதேச செயலாளர், பிரதேசசெயலக ஆளுகைக்குட்பட்ட விடயங்களுக்கே தம்மால் அனுமதி வழங்கமுடியுமெனவுந் தெரிவித்தார். மகாவலி அதிகாரசபைப் பிரிவிற்குட்பட்ட பகுதியிலுள்ள கமக்காரஅமைப்பிற்கு தம்மால் அனுமதியை வழங்கமுடியாது எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு "அந்தரவெவ; கமக்கார அமைப்பிற்கு தம்மால் உரமானியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் விடயத்தில் தமக்கு பல சந்தேகங்கள் இருக்கின்றன எனவும், எனவே அதுதொடர்பில் தாம் விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

குறிப்பாக உரமானியத்திற்குரிய அனுமதியென்பது உரிய பகுதிகளுக்குரிய கிராம அலுவலர் ஆராய்ந்து உறுதிப்படுத்தி கையெழுத்திட்ட பின்னரே, கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலை அடிப்படையாக வைத்தே தம்மாலும் அனுமதிவழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இது தவிர குறித்த உரமானியத்திற்கு அனுமதியைப் பெற்றவர்கள், பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வேறு ஓர் இடத்திற்கு அனுமதியைப் பெற்றுவிட்டு மகாவலி அதிகாரசபைக்குட்பட்ட அந்தப் பகுதிக்கு எம்மால் உரமானியத்திற்கான அனுமதி வழங்கப்பட்டதாக காண்பித்துக் கொள்ளக்கூடிய நிலமையிருப்பதாகவும் பிரதேசசெயலாளர் தெரிவித்தார்.

அத்தோடு கிராம அலுவலரும் முழுமையாக ஆராயாமல், மகாவலியின் ஆளுகையிலுள்ள பகுதிக்கு உறுதிப்படுத்தி அனுமதியை வழங்கியிருக்கவும் சந்தர்ப்பமிருப்பதாகவும், இந்த அடிப்படையிலேயே தம்மாலும் அந்தரவெவ என்ற கமக்கார அமைப்பிற்கு உரமானியம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கலாமெனவும் மழுப்புகின்ற விதத்தில் கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது இடையிட்டு கருத்துத் தெரிவித்த ரவிகரன், சட்டவிரோதமாக பதிவுசெய்யப்பட்ட ஒரு கமக்கார அமைப்பிற்கு உரமானியத்திற்கு பிரதேசசெயலாளர் கையெழுத்திட்டுவிட்டு இவ்வாறு பொறுப்பற்று கருத்துத் தெரிவிக்க முடியாதென மிகவும் கடுமையாகக் கூறினார்.

மகாவலியின் ஆளுகையிலுள்ள அந்த கமக்கார அமைப்பிற்கு உரமானியம்வழங்குவதைநிறுத்துவதுடன், குறித்த சட்டவிரோத கமக்கார அமைப்பை நீக்குமாறும் தெரிவித்தார்.

இந்நிலையில் அதுதொடர்பான சர்சைக்குரிய ஆவணங்கள் இருப்பின் சமர்பித்தால் தம்மால் உரிய விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியுமென பிரதேச செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

அந்தவகையில் சமூகசெயற்பாட்டாளர் தவபாலன் இதன்போது மகாவலி அதிகாரசபைக்குட்பட்ட சட்டவிரோதமாக பதிவுசெய்யப்பட்ட அந்தரவெவ கமக்கார அமைப்பிற்கு வவுனிய வடக்கு கிராம அலுவலர் மற்றும் பிரதே. செயலாளர் உரமானியத்திற்கு அனுமதி வழங்கிய ஆவணங்களை இதன்போது பிரதேச செயலாளரிடம் கையளித்தார்.

இந்தவிவகாரம் தொடர்பாக போலியான பிரசாரங்கள் தமக்கெதிராக தென்னிலங்கைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன என அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் உபாலி சமரசிங்கவினால் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக சிங்கள மக்களுக்குரிய இடங்களை தமிழ் மக்களுக்கு வழங்கத் தாம் நடவடிக்கைகளை மேற்கொள்கின் றார் எனத் தென்னிலங்கைப் பகுதிகளில் சமூகவலைத் தளங்களினூடாக போலியான பரப்புரைகள் தமக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் உபாலி சமரசிங்க இதன்போது தெரிவித்தார்

தென்னிலங்கையிலிருக்கின்ற இனவாதத்தையுடைய பௌத்த துறவிகள் வெலிஓயா பகுதிக்கு வருகைதந்து தேவையற்ற போலியான இனவாதப் பரப்புரைகளை தமக்கெதிராக மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பிலே ஆராய்ந்து உண்மைகளைக் கண்டறிவதற்கான நடவடிக்கையில் தாம் ஈடுபட்டார் எனவும் உபாலி சமரசிங்க இதன்போது தெரிவித்தார்.

அதன்படி பிணக்குக்குரிய பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுடனும், மகாவலி அதிகார

தொடர்ச்சி▼



# திரிவைச்சகுளம் ஆக்கிரமிப்பு விவகாரத்தின் மூலம் மீளவும் இனப்பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்கு இடமளிக்காதீர்!

## வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் ரவிகரன் காட்டம்

தொடர்ச்சி▲

சபையுடனும் தாம் இரு தடவைகள் கலந்துரையாடல்களை மேற்கொண்டார் எனவும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க இதன்போது தெரிவித்தார்.

அதன்படி, பிணக்கிற்குரிய பகுதியில் 40ஏக்கர் காணிகளை, மகாவலி அதிகாரசபை பெரும்பான்மை இனத்தவர்களுக்கு ஒருபோகத்திற்கு விவசாயம் மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியுள்ளமை தம்மால் இதன்போது கண்டறியப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அத்தோடு இவ்வாறு விவசாய நடவடிக்கைக்கென ஒருபோகத்திற்கு மாத்திரம் 40ஏக்கர் காணிகள் ஒப்பந்த அடிப்படையில் மகாவலி அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்தபோதும், பெரும்பான்மை இனத்தவர்கள் அந்த ஒப்பந்த நடைமுறைகளை மீறி தொடர்ந்தும் அங்கு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், கடந்தகால அரசியல் செல்வாக்குக்களை பயன்படுத்தி பெரும்பான்மை இனத்தவர்களால் மேலதிகமாக 150 ஏக்கர் வரையில் காணிகள் அத்துமீறி அபகரித்துள்ள விடயத்தினையும் தாம் அறிந்துகொண்டார் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயங்களை அறிந்துகொண்டபிற்பாடு ஏற்கனவே மகாவலி அதிகாரசபையால் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு ஒரு போகத்திற்கான ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட 40ஏக்கர் காணிகளில் மாத்திரம் இன்னும் ஒருபோகத்திற்கு மாத்திரம் பயிர்செய்கை மேற்கொள்ளமுடியும். அதன்பின்னர் அவர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டுமென ஒரு தீர்மானமும் அக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்டதாகவும் உபாலி இதன்போது தெரிவித்தார்.

இருப்பினும் தற்போதும் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு மாறாக பெரும்பான்மை இனத்தவர்கள் 40 ஏக்கருக்கும் மேலதிகமாக தற்போதும் பயிற்செய்கை மேற்கொண்டுள்ளனர் எனத் தமக்கு தகவல் கிடைத்ததாகவும், அந்தவகையில் மேலதிகமாக பயிற்செய்கை மேற்கொண்டவர்களுக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரியவர்களிடம் அறிவுறுத்தியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் மகாவலி அதிகாரசபையினால் அடுத்த ஆண்டில் கிவுல் ஓயாத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளமை தொடர்பிலும் இதன்போது உபாலி சமரசிங்கவினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக வெலிஓயாப் பகுதிக்கு நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளும் வகையில் குறித்த பிணக்குக்குரிய பகுதி உள்ளடங்கலான பெரும்பகுதிகளை உள்ளடக்கி கிவுல் ஓயா என்னும் பெயரிலான பாரிய நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

கிவுல் ஓயாத்திட்டத்தினை அமுல்படுத்தினால் இந்த பிணக்குக்குரிய பகுதி உள்ளிட்ட பெரும் பகுதிகள் நீர்த்தேக்கத்தின் நீரேந்து பிரதேசமாகமாறும் எனவும் தெரிவித்தார்.

தமிழர்களின் பூர்வீக மணலாற்றை வெலிஓயாக மாற்றிவிட்டு அங்கு அத்துமீறி குடியேற்றப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு இந்த பாரிய நீர்ப்பாசனத் திட்டத்தில் 6000ஏக்கர் நீர்ப்பாசன விவசாயக் காணிகள் வழங்கப்படவுள்ளன எனவும் அறியமுடிகின்றது.

கிவுல்ஓயா திட்டத்தைச் செயற்படுத்தினால் வவுனியாவடக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக விவசாயக்குளங்கள் மற்றும் அவற்றின் கீழான வயல் நிலங்கள், தமிழர்களின் பூர்வீகக் கிராமங்கள் பலவும் நீரில்மூழ்கும் அபாயம் ஏற்படுமென ரவிகரன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அந்த வகையில் தமிழர்களின் பூர்வீக விவசாயக் குளங்களான இராமன்குளம், கொட்டோடைக்குளம், ஒயாமடுக்குளம், வெள்ளான்குளம், பெரியகட்டுக்குளம், பனிக்கல்மடுக்குளம், சன்னமுற்றமடுக்குளம், கம்மாஞ்சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக்குட்டிக்குளம், திரிவைச்சகுளம் முதலான சிறிய நீர்ப்பாசனக் குளங்களும், வெடிவைச்சகல்லு குளத்தின் கீழ்வரும் வயல்காணிகள் பகுதியளவிலும், நாவலர்பாம், கல்லாற்றுக் குளம், ஈச்சன்குளம், கூழாங்குளம், வயற்காணிகளும் வவுனியா வடக்கிலுள்ள பழந்தமிழ் கிராமங்களான காட்டுப்பூவரசங்குளம் கிராமம், காஞ்சூரமோட்டைக் கிராமம், மருதோடைக் கிராமத்தின் ஒருபகுதி உள்ளிட்ட பகுதிகள் அந்தக் கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தின் நீரேந்து பகுதிகளாக மாறும் அபாயம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறாக தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள் மற்றும் குளங்கள், பழந்தமிழ் கிராமங்கள் என்பவை விழுங்கப்பட்டே இந்த கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டம் வெலிஓயாவில் குடியேற்றப்பட்ட சிங்களமக்களுக்காக முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



# துப்பாக்கியை திருடிய கைதி; உள்ளக விசாரணை ஆரம்பம்

கல்கிசை நீதிமன்றத்தின் வழக்கு சான்றுப் பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட அறையிலிருந்து கைத்துப்பாக்கியை திருடிய கைதி தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழு நியமிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலை கைதியொருவர் கல்கிசை நீதிமன்ற வழக்கு சான்றுப் பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட அறையிலிருந்த கைத்துப்பாக்கியை நேற்று முன்தினம் திருடியிருந்தார்.

துப்புரவு பணிகளுக்காக கல்கிசை நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டிருந்த கைதியே இவ்வாறு திருட்டில் ஈடுபட்டிருந்தார்.




மேற்படி கைத்துப்பாக்கி சூட்சுமமான முறையில் உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

செக்கோஸ்லோவாக்கியாவில் தயாரிக்கப்பட்ட 09 மில்லி மீற்றர் ரக கைத்துப்பாக்கியே இவ்வாறு திருடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அரசாங்கத்துக்கு அரச மருத்துவ அதிகாரிகள் 1,277 மில்லியன் ரூபா செலுத்தவேண்டும்

## தேசிய கணக்காய்வு அலுவலகம் தகவல்

சேவையில் இருந்து விலகிய, அரச மருத்துவ அதிகாரிகள் 1,277 மில்லியன் ரூபாவுக்கும் அதிகளவான நிதியை, அரசுக்கு செலுத்த வேண்டியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி நிலவரப்படி, இந்த தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசினால் அறவிடப்பட வேண்டிய பிணை முறி, தண்டப் பணம் மற்றும் கடன் முற்பண நிலுவைகளே இதற்குள் உள்ளடங்குகின்றன.

விசேட கணக்காய்வு அறிக்கை ஊடாக இந்த விடயம் வெளியாகியுள்ளது.

இந்தநிலையில், பல காரணங்களுக்காக, வெளிநாடு செல்லும் மருத்துவ அதிகாரிகள் சேவையை விட்டு விலகுவது மற்றும் சேவையை கைவிடுவது போன்ற செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேநேரம் இந்த நிதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகளில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் கணக்காய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.



2015 ஆம் ஆண்டு முதல், 2024 ஆம் ஆண்டு இறுதி வரை மொத்தம் 705 மருத்துவர்கள் தமது ஒப்பந்தத்தை மீறியுள்ளமை இந்த கணக்காய்வு அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

# சுங்கத் திணைக்களத்திற்குள் தோட்டாக்கள் மீட்கப்பட்டன

கொழும்பு கோட்டையில் உள்ள சுங்கத் திணைக்களத்தின் தலைமையகத்தின் மூன்றாவது மாடியில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பிரிவில் இருந்து இரண்டு தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன என கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட தோட்டாக்களில் ஒரு டி56 வகை தோட்டாவும் மற்றும் ஒரு 12 போர் வகை தோட்டாவும் உள்ளடங்கும்.

சுங்கத் தலைமையகத்தின் பணிப்பாளர் கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அளித்த தகவலின் அடிப்படையில், தகவல் தொழில்நுட்பப் பிரிவில் உள்ள உதவி சுங்க அதிகாரிகளின் ஓய்வறையில் இருந்து இந்தத் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தோட்டாக்கள் எவ்வாறு அங்கு வந்தன என்பதை கண்டறிய, குற்றப் புலனாய்வு அதிகாரிகள், கைரேகை அலுவலக அதிகாரிகள் மற்றும் மோப்ப நாய்ப் பிரிவினரின் உதவியுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



கோட்டை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியான பிரதான பொலிஸ் பரிசோதகர் திலீப டி சில்வாவின் உத்தரவின் பேரில், பொலிஸ் பரிசோதகர் ரணவக்க உட்பட ஒரு குழுவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேலை நிறுத்தப் போராட்டம்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடு தழுவிய 24 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதன்படி, இன்று காலை 8 மணி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட அந்த சங்கம் தீர்மானித்துள்ளது.

முறையற்ற இடமாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நாட்டில் லட்சத்தை தாண்டியது நீரிழிவு நோயாளர் எண்ணிக்கை



காயங்களுடன் கூடிய சுமார் ஒரு இலட்சம் நீரிழிவு நோயாளிகள் தற்போது நாட்டில் உள்ளனர் என இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் காயங்கள் புற்றுநோயை விடவும் மிகவும் ஆபத்தானது என கொழும்பு தேசிய மருத்துவமனையின் இரத்தக் குழாய்கள் தொடர்பான விசேட சத்திரசிகிச்சை மருத்துவ நிபுணரான பேராசிரியர் ரெஸ்னி காசிம் குறிப்பிட்டுள்ளார்.

நீரிழிவு நோயாளிகளின் கால்களில் ஏற்படும் சிறிய காயம் கூட, காலை வெட்டி அகற்ற வேண்டிய நிலைக்குச் செல்லும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

நீரிழிவு நோய் காரணமாக ஒரு காலை இழந்தவர்களில், 30 வீதமானோருக்கு மூன்று ஆண்டுகளுக்குள் மற்ற காலையும் இழக்கும் ஆபத்து அதிகமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் சனத்தொகை 0.5 சதவீதத்தால் அதிகரிப்பு



இலங்கையின் சனத்தொகையானது ஆண்டுதோறும் 0.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2012ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டுவரையிலான காலகட்டத்தில் இலங்கையின் சனத்தொகையானது, ஆண்டுதோறும் சராசரியாக 0.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

சனத்தொகை அதிகரிப்பு வீதம் 12 வருட காலப்பகுதியை உள்ளடக்கியதாக அமையப்பெற்றுள்ளது.

இந்த கணக்கெடுப்பு தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நேற்று வெளியிட்டது.

ஆண்டுக்கு 0.5 வீதம் என்ற இந்த மிதமான அதிகரிப்பு வீதம், நாட்டின் பிறப்பு வீதம், இறப்பு வீதம் மற்றும் நிகர குடியேற்ற வீதம் ஆகிய காரணிகளின் ஒருங்கிணைந்த விளைவை சுட்டிக்காட்டுகிறது.

2024 குடிசன, வீட்டுவசதிகள் தொகை மதிப்பின் போது இலங்கையின் சனத்தொகை 21,781,800 ஆக பதிவாகியுள்ளது.

2012 ஆம் ஆண்டு தொகை மதிப்பின் போது பதிவாகிய 20,359,439 சனத்தொகையை விடவும் இம்முறை சனத்தொகையானது 1,422,361 இனால் அதிகரித்து காணப்படுகிறது.




# முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் பொலிஸ் ஜீப் தடம்புரண்டு விபத்து

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் மணவாளன்பட்டமுறிப்புக்கு அண்மித்த பகுதியில் நேற்றுப் பொலிஸ் ஜீப் ஒன்று தடம்புரண்டு விபத்திற்குள்ளானது.

அந்த வீதியில் பயணித்த பொலிஸாரின் ஜீப் வாகனத்தின் முன் திடீரென மாடுகள் குறுக்கே வந்தமையால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி தடம்புரண்டு விபத்தைச் சந்தித்துள்ளது.

இவ்விபத்தில் வாகனத்தில் பயணித்த பொலிஸார் சிலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர் எனவும், ஜீப் கடுமையாக சேதமடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையுடன், சேதமடைந்த வாகனத்தை மீட்டு கொண்டு சென்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமீபகாலமாக வீதிகளில் கட்டாக்காலி கால்நடைகள் அலைந்து திரிவது காரணமாக விபத்துகள் அதிகரித்து வருகின்றன.

# புல்மோட்டை கனியவள ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்ட முஸ்தீபு



(எஸ்.கீதபொன்கலன்)

அமைதியான தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற புல்மோட்டை கனியவள கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதி ஊழியர்கள் அதனை உண்ணாவிரதப் போராட்டமாக முன்னெடுக்கவுள்ளனர்.

அவர்களில் சிலருக்கு நியமனம் வழங்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை 15 மாதங்களாகியும் எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்மாதம் 14 ஆம் திகதி முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த 83 ஊழியர்களும் தமது அமைதியான போராட்டத்திற்கு இதுவரை எவ்வித தீர்வுகளும் கிடைக்கப்பெறவில்லை என்ற காரணத்தினால் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர் எனக் கூறியுள்ளனர்.

16 நாள்களைக் கடந்தும் தீர்வு எட்டப்படாதபடியால் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளனர் எனவும், இதன் தொடர்ச்சியாக தமது குடும்ப உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் எனவும் போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.



# சீமானுடன் பசும்பொன்னில் சந்திப்பு; ‘செந்தமிழர்’ என அழைத்தார் வைகோ

அரசியலில் எதிரும், புதிருமாக இருந்து வந்த வைகோ, சீமான் பசும் பொன்னில் ஒன்றாக சந்தித்துக் கொண்டதோடு, சீமானை ‘செந்தமிழர் சீமான்’ என முழக்கமிட்டதோடு அவரை ஆரத்தழுவி கட்டி அனைத்துக் கொண்டது, நா.த.கவினர் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக அரசியலில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் தங்கள் அரசியல் நிலைப்பாடுகளில் எதிரெதிர் துருவ மாக செயல்பட்டு வந்தனர். விடுதலைப் புலிகள் அமைப்பு சம்பந்தமான விவ காரத்தில் ஒருவர் மீது ஒருவர் மிகக் கடும் விமர்சனங்களை செய்துவந்த நிலையில் நேற்று இருவரும் ஒரே நேரத்தில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவிடத்திற்கு வந்தனர். இருவரும் ஒரே நேரத்தில் பத்திரிகையா ளர்களை சந்தித்தனர்.

அப்போது வைகோ கூறுகையில், “செந்தமிழர் சீமானும், நானும் ஒரே வேளையில் பசும்பொன் வந்தது எல் லையில்லா மகிழ்ச்சி அளிக்கிறது. அவரது முயற்சிகளும் வெற்றி மேல் வெற்றி பெறட்டும். நான் மருத்துவ மனையில் இருந்தபோது என்னை வந்து பார்த்தார். அவருக்கு உடல்நிலை சரியில்லாவிட்டால் நான் கவலையுடன் பேசுவேன்.” என்றார்.

அதற்கு உடனே சீமான், ”நானும், எண் அண்ணனும், அவரது அம்மா இறந்தபோது ஒன்றாக நின்று பேட்டிக் கொடுத்தோம்” என்று சிலாகித்தார். அதற்கு வைகோ, ”என் தாய் இறப்பிற்கு கலிங்கப்பட்டிக்கு ராத்திரியோடு ராத்திரியாக சீமான் வந்தார் சீமானின் அரசியல் பயணம் தொடரட்டும்” என் றார்.

பசும்பொன்னில் வைகோ, சீமானை ‘செந்தமிழர் சீமான்’ என்று முழக்கமிட்ட தோடு, இருவரும் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி கட்டி அனைத்துக் கொண்ட சம்பவம் நாம் தமிழர் கட்சியினர் மத்தி யில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள் ளது.

---

# ரஷ்ய எண்ணெய் மீதான தடை குறித்து இந்தியா ஆய்வு செய்து வருகின்றது

## வெளியுறவு அமைச்சகம் தகவல்

ரஷ்ய எண்ணெய் நிறுவனங்கள் மீது அமெரிக்கா சமீபத்தில் விதித்துள்ள தடைகள் குறித்து இந்தியா ஆய்வு செய்து வருகிறது என வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ரந்திர் ஜெய்ஸ்வால்,

“ரஷ்ய எண்ணெய் நிறுவனங்கள் மீதான அமெரிக்காவின் சமீபத்திய தடைகள் குறித்து நாங்கள் ஆய்வு செய்து வருகிறோம். சர்வதேச சந்தை நிலவரத்துக்கு ஏற்பவே எங்கள் முடிவு கள் இருப்பது வழக்கம். எரிசக்தி குறித்த கேள்விக்கான எங்கள் பதில் மற்றும் நிலைப்பாடு நன்கு அறியப்பட் டதாகும். எங்கள் 140 கோடி மக்களின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய் வதற்கு ஏற்ப அவற்றை மலிவு விலை யில் பெற வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு.

ஈரானின் சபாஹர் துறைமுகத்தின் மீது அமெரிக்கா தடை விதித்துள்ளது.




அமெரிக்கத் தடைகளுக்கு 6 மாத காலத்துக்கு இந்தியா விலக்கு பெற் றுள்ளது. அமெரிக்கா உடனான வர்த்தக பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன. நாங்கள் தொடர்ந்து இதில் ஈடுபட்டு வருகிறோம்.

சில இந்திய நிறுவனங்கள் சீனா விடம் இருந்து அரிய பூமி தாதுப் பொருள்களை இறக்குமதி செய்வதற் கான உரிமங்களைப் பெற்றுள்ளன. தற்போது அமெரிக்க அதிபர், சீன அதிப ருடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார். இந்த பேச்சுவார்த்தைகள், களத்தில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

சமீபத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தியா - ஆப்கனிஸ்தான் கூட்டறிக் கையில் வலியுறுத்தியபடி, நீர்மின் திட்டங்கள் உட்பட அதன் நீர் மேலாண் மையில் ஆப்கனை ஆதரிக்க இந்தியா தயாராக உள்ளது. இன்று இந்தியா - ஆப்கனிஸ்தான் நட்பு அணை என்று அழைக்கப்படும் சல்மா அணை உட்பட 2 நாடுகளுக்கும் இடையே ஒத்து ழைப்பின் வரலாறு உள்ளது.

பாகிஸ்தான் - ஆப்கனிஸ்தான் பிரச் சினைகளைப் பொறுத்தவரை, ஆப் கனிஸ்தான் தனது நாட்டின் இறை யாண்மை மீது உறுதியாக இருப்பதை பாகிஸ்தான் ஏற்க மறுக்கிறது. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை செயல் படுத்த தனக்கு உரிமை இருப்பதாக பாகிஸ்தான் கருதுகிறது. ஆனால், அதன் அண்டை நாடுகள் அதை ஏற்க மறுக்கின்றன. ஆப்கனிஸ்தானின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப் பாடு, சுதந்திரத்துக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கிறது.” என தெரிவித்துள்ளார்.





# வர்த்தகப் போருக்கு மத்தியில் ட்ரம்ப் - ஜி ஜின்பிங் சந்திப்பு!

தென்கொரியாவில் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்கைச் சந்தித்த பின்னர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகப் பிரச்சினைகள் குறித்து முக்கிய முடிவுகளை அறிவித்துள்ளார்.

இரு நாடுகளும் ஏறக்குறைய எல்லாவற்றிலும் ஒரு உடன்பாட்டிற்கு வந்துள்ளன என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆசியாவில் தனது மூன்று நாடுகளுக்கான பயணத்தை முடித்த பிறகு பேசிய ட்ரம்ப், சோயாபீன்ஸ் இறக்குமதி, அரிய மண் மற்றும் ஃபெண்டனைல் விவகாரங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக, சீனப் பொருள்கள் மீதான ஒட்டுமொத்த வரிகள் 57 வீதத்திலிருந்து 47 வீதமாகக் குறைக்கப்படும் என்று தெரிவித்தார்.

வர்த்தகப் போருக்குப் பதிலடியாக சீனா எடுத்த நடவடிக்கைகளில் தகுந்த மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அந்நாட்டின் வர்த்தக அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, அரிய மண் ஏற்றுமதி மீதான புதிய கட்டுப்பாடுகளை ஓர் ஆண்டுக்கு நிறுத்தி வைப்பதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

உலகின் இருபெரும் பொருளாதாரங்களுக்கு இடையே அதிகரித்து வந்த வர்த்தகப் போரில் ஏற்பட்டுள்ள இந்த நடவடிக்கை ஒரு தற்காலிக நிம்மதியைக் கொடுத்துள்ளது.

இதேவேளை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் தான் பீஜிங்கிற்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் ட்ரம்ப் கூறினார்.

ஸி ஜின்பிங்குடனான சந்திப்புக்கு முன்னதாக, ட்ரம்ப் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்.

சீனா மற்றும் ரஷ்யா போன்ற போட்டி நாடுகள் மேம்பட்ட ஆயுத சோதனைகளை செய்வதற்குப் பதிலடியாக, உடனடியாக அணு ஆயுதங்களைச் சமமான அடிப்படையில் சோதிக்க பாதுகாப்புத் துறைக்குத் தாம் அறிவுறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.






# பாரிஸ் லூவர் அருங்காட்சியக திருட்டு; மேலும் ஐந்து சந்தேக நபர்கள் கைது!

பிரான்சின் பாரிஸில் உள்ள லூவர் அருங்காட்சியக திருட்டு சம்பவம் தொடர்பாக மேலும் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைதுகள் புதன்கிழமை இரவு பாரிஸ் பிராந்தியத்தில் இடம்பெற்றதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டவர்களில் பிரதான சந்தேக நபர் ஒருவரும் உள்ளடங்குகிறார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு முன்னர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட இரண்டு சந்தேக நபர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே இந்த புதிய கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலகின் அதிக பார்வையாளர்களைக் கொண்ட அருங்காட்சியகமான லூவர் அருங்காட்சியகத்தில் கடந்த ஒக்டோபர் 19 ஆம் திகதி திருட்டு சம்பவம் இடம்பெற்றது.

பகல் நேரத்தில் நான்கு திருடர்கள் கட்டடத்திற்குள் நுழைந்து, 88 மில்லியன் யூரோக்கள் மதிப்புள்ள நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இருப்பினும், திருடப்பட்ட நகைகள் இன்னும் மீட்கப்படவில்லை என்று அரச சட்டத்தரணி பெக்குவோ வியாழக்கிழமை பிரெஞ்சு வானொலி அலைவரிசை ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளில் ஒரு முக்கியமான ஆதாரம் கிடைத்துள்ளதாகவும், கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரின் டி.என்.ஏ குற்ற நிகழ்விடத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் என்றும் அரச சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

பிரெஞ்சு விசாரணையாளர்கள் தற்போது மேலதிக விவரங்களை வழங்கவில்லை என்றாலும், புதிய சந்தேக நபர்களைக் குற்றச்சாட்டுகள் சுமத்த அல்லது விடுதலை செய்ய முன்னர் நான்கு நாள்கள் வரை தடுத்து வைத்து விசாரிக்க முடியும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் -31.10.2025




சம்பிரதாய விழாக்கள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளில் கலந்து கொள்வதன் மூலம் ஆறுதல் மற்றும் நிவாரணம் கிடைக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் பதட்டம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலையை கையாள அனுசரணையான போக்கை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையின் மீது தவறான கருத்து கொண்டிருப்பீர்கள். இது உங்களுடைய உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவு காண சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.




இன்று சற்று கடினமான சூழ்நிலைகள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை மற்றும் உறுதி அவசியம். உங்கள் அன்றாட நிகழ்வுகளில் விழிப்புணர்வு தேவை.

பணியிடத்தில் மிதமான பலன்கள் காணப்படும். அதிகப் பணிகள் கவலையை அளிக்கும். அதனால் பணிகளைக் கையாளும்போது கவனக்குறைவு ஏற்படும்.

உங்கள் துணையுடன் குடும்பப் பிரச்சினை ஒன்றை சந்திக்க நேரலாம். குடும்பத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கம் ஏற்பட ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசிக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று புதிய மனிதர்களுடன் கலந்துறவாடுவீர்கள். புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள இது உகந்த நாள். அனுபவப் பூர்வமான பாடம் இதன் மூலம் கற்கலாம்.

உங்கள் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலனை பெற்றுத் தரும். உங்கள் நேர்மையான அணுகுமுறை காரணமாக பணியில் சாதிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். அதன் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

பணபுழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் குடும்பத்துடன் வெளியே செல்லுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.




இன்று சௌகரியங்களை அனுபவிக்கும் நாள். இன்றைய நாள் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும். இன்று மனவலிமை அதிகம் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்களின் செயல் திறன் சக பணியாளர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். நீங்கள் இருவரும் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்றைய நாளை நீங்கள் புதிய முதலீடுகள் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.




இன்று கடினமான சூழ் நிலை காணப்படும். அது உங்கள் நாளின் சீரான நிலையை பாதிக்கும். கவனமுடன் செயலாற்ற வேண்டும். தனிமை உணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை சமாளிக்க வேண்டும். அமைதி பெற பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன்களைக் காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும்.

உங்கள் துணையிடம் கருத்து வேறுபாடு கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.




கடினமான சூழ்நிலைகளை கையாள பொறுமை அவசியம். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில்பணிகளை மேற்கொள்ளும்போது கடினமான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதிலும் சிக்கல்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் சமநிலை மற்றும் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும்.




இன்று மன வலிமை நிறைந்து காணப்படும். எதிர்பாராத நன்மைகள் திருப்தியை அளிக்கும். விருந்தினர்கள் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியிடச் சூழல் இனிமையாகவும் மகிழ்ச்சி கரமாகவும் காணப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். ஊக்கத்தொகை வகையில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைய இந்த நாள் அனுகூலமாக இருக்காது. அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் உங்களை வைத்திருப்பது நல்லது. இன்று திறமையாக செயலாற்ற அனுசரணையான அணுகுமுறை தேவை.

பணியில்சிலதவறுகளைநீங்கள்செய்யநேரலாம். இன்று பணியில் கவனம் மிகவும் அவசியம்.

சில கருத்து வேறுபாடு காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு சற்று பாதிப்படையும்.

இன்று நிதிநிலைமை அபாரமாக இருக்கும். கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு அதிருப்தி அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -31.10.2025




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நன்மை அடையலாம்.

பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்த இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. எனவே பொறுமை மேற்கொள்ளுங்கள். பேசுவதை தவிர்த்திடுங்கள்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். பண இழப்பு காணப்படுகின்றது. எனவே கவனமாக பணத்தை கையாளவும்.




உங்கள் மனோதிடம் மற்றும் உற்சாகம் காரணமாக இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நல்ல பண வரவு காணப்படுகின்றது. உங்கள் கடின உழைப்பு காரணமாக ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் பண வரவு ஏற்படும்.




இன்று தேவையில்லாமல் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். திறமையாகப் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் கடுமையான விவாதங்கள் இருவரிடையே ஏற்படலாம். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பண வரவு எதிர்பார்த்த அளவுக்கு காணப்படாது. தேவையற்ற செலவுகள் எழும். பணத்தை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.




புத்திசாலித்தனத்தை சரியான நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் இன்று சாதகமான பலன்கள் கிட்டும். உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் சிறப்பான செயல் திறன் மூலம் பணியில் வெற்றி பெறும் நிலை காணப்படும். உங்கள் பணியின் மூலம் கூடுதல் நற்பலன்கள் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சிறந்த தொடர்பு கொண்டிருப்பீர்கள். இதனால் அன்பும் மகிழ்ச்சியும் பெருகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சிறப்பாக சேமிக்க இயலும். புதிய முதலீடுகள் லாபகரமாக இருக்கும்.

# திருகோணமலையில் பெருந்தொகையில் சிவப்பு நண்டுகள் கரை ஒதுங்குகின்றன!





**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை உள்துறைமுகக் கடற்கரையில் நேற்று முன்தினம் இரவு முதல் பெருந்தொகையான சிவப்பு நிற நண்டுகள் கரை ஒதுங்கி வருகின்றன.

இதில் பெருமளவான நண்டுகள் இறந்த நிலையிலும் சில நண்டுகள் உயிருடனும் கரை ஒதுங்கி வருகின்றன.

